வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 84 | பக்கங்கள் : 20


08 உக்ரைனில் ரஷ்யாவின் உக்கிரம் ஏன்?


09 உலக அழகியாக இருந்தாலும் கைகொடுத்தது கல்விதான்


14 மகாசிவராத்திரியும் மயான காண்டமும்


10 உங்கள் வளர்ச்சிக்கு கைகொடுக்கும் 'வருத்தம்!'

# ஜனநாயக ஆட்சியிலிருந்து நாம் விலகப்போவதில்லை

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



கொழும்பு, பெப்ரவரி 27

நாட்டை ஆட்சி செய்யும் போது, பொது மக்களின் சுதந்திரம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதி செய்யும் ஜனநாயக முறைமையிலிருந்து விலகப்போவதில்லை என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். 19

ஜோ பைடனின் செய்தியுடன்

## கொழும்புக்கு வருகிறார் அமெரிக்க உயர் அதிகாரி



கொழும்பு, பெப். 27

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் செய்தி ஒன்றுடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மூன்றாவது பெரிய பதவியை வகித்து வரும் ஜேன் நுலான்ட் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார் என தெரியவரு 19

## அரச உயர்மட்டக் குழு ஜெனிவாவுக்கு பயணம்

### மார்ச் 2 இல் பச்சலெட்டுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 27

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49ஆவது அமர்வில் பங்கேற்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்ட குழு ஜெனிவாவுக்கு சென்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண ஆகியோர் நேற்று முன்தினம் ஜெனிவாவுக்கு பயணமாகினர்.

இதேவேளை, வெளிவிவகாரச் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம் 19

## எரிபொருள் தட்டுப்பாட்டை வீணாக ஏற்படுத்தவேண்டாம்

### யாழ். மாவட்ட செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்.மாவட்டத்தில் தேவைக்கு ஏற்ப எரிபொருளை பகிர்ந்து விநியோகிக்குமாறு மாவட்ட செயலாளர் க.மகேசன், பெற்றோலியக் 19

## யாழ்.சிறையில் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்!

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாண சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த அரசியல் கைதிகள் தற்காலிகமாகப் போராட்டத்தை கைவிட்டுள்ளனர். இந்த அரசியல் கைதிகளை நேற்று சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்ட 19

## எரிபொருள் நெருக்கடியைச் சமாளிக்க மத்திய வங்கியால் புதிய யோசனைகள்

### வாரத்தில் நான்கு நாள்களே வேலை

கொழும்பு, பெப். 27

டொலர் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான யோசனையொன்றை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 19

## போரை நிறுத்தும் பிரேரணை: வீற்றோவால் தடுத்தது ரஷ்யா

### இந்தியாவும் சீனாவும் நழுவல்



நியூயோர்க், பெப். 27

உக்ரைனில் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவந்து தனது படைகளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்றுகோரும் பிரேரணையை ஐ. நா. பாதுகாப்புச்சபை 19

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்வரை போராட்டம்!

### சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



கொழும்பு, பெப். 27

"நாட்டில் இன, மத பேதமின்றி சகல மக்களுக்கும் எதிராகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது.

ஆகவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டு செல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் 19

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு செய்யவுள்ளார் கர்தினால் மல்கம்!



கொழும்பு, பெப். 27

வத்திகான் சென்றுள்ள கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, அங்கிருந்து நெதர்லாந்தின் ஹேக் நகருக்கு புறப்பட்டுச் செல்ல உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில், ஈஸ்டர் தாக்குதல் சம் 19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் தமிழ்மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்லில் மாத்திரமன்றி, செயலிலும் காட்டியவர் மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

ஜனாதிபதி தேர்தலில், தமிழ்மக்கள் தமது வாக்குகளை ஒரு தமிழருக்கு வழங்கவேண்டுமே தவிர, வேறு எவருக்கும் அல்ல. அவர் வெற்றிபெறமுடியாது என்பது தெரிந்திருந்தாலும், தமிழ் மக்கள் ஒரு கோரிக்கையை முன்வைத்து அந்த தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தி, அவருக்கு வாக்களிப்பதன் மூலம் தமது கோரிக்கையை வலியுறுத்தலாம் என்பது குமாரின் நோக்கமாக இருந்தது.

அதனையே, விடுதலைப் புலிகள் தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலம் செய்துகாட்டினர்.

புலிகள் அவ்வாறு முடிவெடுக்காமல் இருந்திருந்தால், இரண்டாயிரத்து ஐந்து தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருப்பார் என்றும், புலிகள் இப்போதும் இருந்திருப்பார்கள் என்றும் வாதிடுபவர்களும் இருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருந்தாலும், இப்போது நடந்து முடிந்ததே நடந்திருக்கும். என்ன, வெற்றிக் கோஷம் ரணில் வசமிருந்திருக்கும், அவ்வளவுதான். ஆனால், அந்த தேர்தல் தமிழ்மக்களுக்கு சம்பந்தமில்லாத ஒன்று என்பதை சொல்வதுதான் புலிகளின் நோக்கமாக இருந்தது.

யுத்தம் முடிந்த பின்னர் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறவும், இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட கொடுமை களுக்கு நீதி வேண்டியும் போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் இன்றி, சர்வதேசத்தையே பார்த்துக்கொண்டு காவலிருக்கின்றனர்.

இன்னுமொரு தரப்பினர் இலங்கையில் நடந்தவை இனப்படுகொலை என்று நிரூபிப்பதன் மூலம் தமிழ்மக்களின் தலைவிதியை தாமே தீர்மானிக்கின்ற வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதன் மூலம் தீர்வுகாணலாம் என்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

நடந்துமுடிந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க அவர்கள் பகீரதப்பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றனர். இடையிடையே அவ்வப்போது நமது தலைவர்கள் சிலரே, நடந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க முடியாது என்று கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நேரத்தில் இறுதி யுத்தத்திற்கு தலைமைதாங்கிய இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே, தமிழ் மக்கள் படையினருக்கு சான்று பகிர்ந்துள்ளனர் என்கிறார்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், வேட்பாளராக தான் போட்டியிட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைவிடவும் தனக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. இதனால், இலங்கை படையினர் தம்மை துன்புறுத்தினார்கள் - இன அழிப்பு செய்தார்கள் என்பதை வடக்கிலுள்ள மக்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிறது என்று தெரிவித்திருக்கி றார் சரத் பொன்சேகா.

அவர் சொல்வதும் தர்க்கரீதியாக சரியானதுதான்.

அந்தத் தேர்தலில் சம்பந்தன் களமிறங்கவேண்டும் என்று சிலர் யோசனை சொன்னபோது, இது மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதற்கான யோசனை என்றும் அவ்வாறு கூறியவர்கள் மஹிந்தவின் ஆதரவாளர்களாகவும் சித்தரிக்கப்பட்டனர்.

எங்கள் குறிக்கோள் எல்லாம் இப்போது மஹிந்தவைத் தோற்கடிப்பது மாத்திரம்தான் என்று விடாப்பிடியாக இருந்த கூட்டமைப்பும் அதன் தலைமையும், ‘பேயை தோற் கடிப்பதற்காக பிசாசு ஒன்றுக்கு’ ஆதரவளிக்க முன்வந்திருந்தது.

அவர் வெற்றிபெற்றிருந்தாலும் என்ன செய்திருப்பார் என்பதையே அவர் இப்போது சொல்லிக் கொண்டிருக் கின்றார். இவரை நம்பித்தான் நமது தலைமைகள் அப்படி யொரு முடிவை எடுத்திருந்தார்கள்.

பௌத்தமயமாக்கலுக்கு எதிராக நாம் குரல்கொடுக்கின்ற போது, சஜித் பிரேமதாசா இனி இப்படிக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

“வடக்கில் ஆயிரம் பௌத்த கோவில்களை கட்டுவதற்கு கலாசார அமைச்சராக நான் இருந்தபோது நிதி ஒதுக்கியிருந் தேன். எனக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!”

‘குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனிய குட்டுபவனும் மடையன்’ என்றொரு பழமொழி நம்மத்தியில் வழக்கத்தில் உண்டு.

வாழ்நாள் முழுவதும் ஒரே தவறை செய்பவர்களை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை.

ஆனால், அடுத்த, அதற்கடுத்த தேர்தல்களிலும் நாங்கள் ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதுதான் எமது முதல் கடமை என்று கூறிக்கொண்டு, அதே தவறைத்தானே செய்யப் போகின்றோம் - செய்வோம்!

**- ஊர்க்குருவி.**

# அந்நியச் செலாவணி பற்றாக்குறைக்கு அரசு காரணமல்ல என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, பெப். 27

அந்நியச் செலாவணி பற்றாக்குறை இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாகும். கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளால் கிடைக்கப் பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரண மாகும். முந்தைய அரசாங்கங் கள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச் னைகள், தனது அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகளால் ஏற்பட்டவை அல்லவென ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால் களுக்கு முகங்கொடுக்க, எதிர்க்கட்சிகளும் பொதுமக் களும், அரசாங்கமும் இணைந் துப் பணியாற்றவேண்டிய தேவையை எடுத்துரைத்த ஜனாதிபதி, இடையூறு விளை விக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், பொய்ப் பிரசாரங்கள் போன்றவற்றை, எந்தவொரு பொறுப்பான தரப்பிடமிருந்தும் எதிர் பார்க்கவில்லை என்று கூறி னார்.



(அ)

# நிமலராஜன் கொலை சந்தேகநபர் கைது; மனித உரிமை அமைப்புக்கள் வரவேற்பு

கொழும்பு, பெப். 27

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலரா ஜன் கொலை தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த சந்தேகநபரை பிரிட்டனின் பொலிஸார் கைதுசெய்துள்ளதை மனித உரிமை அமைப்பு கள் வரவேற்றுள்ளன.

விசாரணைகளை தொடர்ந்து 48வயது நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ள லண்டனின் மெற்றோபொலிட்டன் பொலி ஸார், கைது செய்யப்பட்டவரின் பெயரை வெளி யிடவில்லை.

சந்தேகநபர் கைதுசெய்யப்படுவதற்கு காரணமான விசாரணைகள் 22 வருடங்களின் பின்னரும் நீதி பொறுப்புக்கூறல் குறித்து மெற் றோபொலிட்டன் பொலிஸார் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது என சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்தின் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

நிமலராஜனின் கொலையாளி என குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் பிரிட்டனில் மறைந்து வாழ்ந்துள்ளமை அருவருப்பான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி நிமலராஜன் கொலை செய்யப்பட்டமை இலங் கையின் உள்நாட்டு மோதலில் பத்திரிகையாளர் கள் படுகொலை செய்யப்படுவதன் ஆரம்பமாக காணப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் அநேகமானவர்கள் தமிழர்கள். ஆனால் அனை வரும் தமிழர்கள் இல்லை.

சந்தேகநபர் பிரிட்டனின் சர்வதேச குற்றவி யல் சட்டத்தின் 51ஆம் பிரிவின் கீழ் வரும் குற் றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சட்டம் பிரிட்டனை யுத்தகுற்றம் மனித குலத்துக்கு எதிரான குற்றம்- இனப்படு கொலைகள் குறித்த விசாரணைகளை உலகின் எந்த பகுதியில் இடம்பெற்றாலும் - சர்வதேச நீதிவரம்பின் கீழ் முன்னெடுக்க அனுமதிக்கின் றது,

இந்த வழக்கு மிகவும் முக்கியமானது- தண் டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படு வது சகித்துக்கொள்ளப்படாது என்பதை தெரி விக்கின்றது என தெரிவித்துள்ள ரெட்டிரெஸ் அமைப்பின் சார்லி லூடன்,இலங்கை போன்ற நாடுகள் விசாரணைகளை முன்னெடுக்காவிட் டால் வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன என் பதை இந்த கைது தெரிவிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும் பிரிட்டன் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என சார்லி லூடன் தெரி வித்துள்ளார்.

2004 முதல் 2010 வரை 44 பத்திரிகையாளர் கள் கொல்லப்பட்டதை பதிவு செய்துள்ள ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் என்ற இலங்கை அமைப்பு இந்த கைது முக்கியமான முன்னுதாரணமாக விளங்குகின்றது என தெரி வித்துள்ளது.

பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்ட னையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வர்கள் இரண்டு தசாப்தங்களிற்கு பின்னரும் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் விளைவுகளை எதிர்கொள்ளவேண்டும்,என தெரிவித்துள்ள அந்த அமைப்பு நிமலராஜனுக்கு நீதி கிடைப் பது குற்றவாளிகளுக்கும் மோசமான குற்றங் களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்த வர்களுக்கும் தெளிவான செய்தியை தெரிவிக் கும் என குறிப்பிட்டுள்ளது. (அ)

# 60 அடி பள்ளத்தில் பாய்ந்தது வான்

கொழும்பு, பெப். 27

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் ரொசல்லை பகுதியில் வான் ஒன்று சுமார் 60 அடிபள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ் செய்த இருவர் சிறிய காயங் களுக்கு உள்ளாகியுள்ள துடன், வான் பலத்த சேதமடைந்துள்ளது.



இந்த விபத்து வட்ட வளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வட்ட வளை நருக்கும்,ரொசல்ல சந்திக் கும் இடைப்பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கி சென்றுகொண்டிருந்த வானே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து வானில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
27.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஐ.நாவின் இயலாமை?

ரஷ்யாவின் படையெடுப்பை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர், வலியுறுத்தியிருந்தார். செயலாளர், உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அதாவது, இதயத்தால் வேண்டுகிறேன் - புடின், யுத்தத்தை தவிர்க்க வேண்டும். ஏற்கனவே அதிகமான மக்கள் இறந்துவிட்டனர் - யுத்தம் இடம்பெற்றால் இன்னும் அதிகமாக மக்கள் இறக்க நேரிடும். ஐ.நா செயலாளரின் இந்த உருக்கமான வேண்டுகோளை ரஷ்ய ஜனாதிபதி நிராகரித்துவிட்டார். ஐ.நா பாதுகாப்பு பேரவையில், ரஷ்யாவிற்கு எதிராக பதினொரு உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனால் ரஷ்யா, அதன் வீட்டோ அதிகாரத்தை பிரயோகித்தமையினால், பிரேரணை தோல்வியடைந்தது. ரஷ்யாவிற்கு எதிரான பிரேரணையின் போது, சீனாவும் இந்தியாவும் வாக்கெடுப்பில் பங்குகொள்ளவில்லை.

இப்போது ஐ.நாவினால் என்ன செய்ய முடியும்? எதனையும் செய்ய முடியாது. இதுதான் ஐ.நாவின் உண்மையான பலவீனம். இதனை எவ்வாறு போக்குவது? உண்மையில் இதனை போக்க வேண்டுமாயின் - மீண்டுமொரு உலக மகா யுத்தம் தோன்ற வேண்டும். அந்த யுத்தத்தின் முடிவில் தற்போதிருக்கின்ற ஐ.நா கட்டமைப்பிற்கு மாற்றாக புதிய அமைப்பொன்று தோன்றலாம். ஏனெனில் இரண்டாம் உலக மகா யுத்தத்தை தொடர்ந்துதான், ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. ஐ.நா உருவாக்கப்பட்டதன் நோக்கம் - மீண்டுமொரு உலக யுத்தம் ஏற்படுவதை தடுப்பதுதான். ஆனால் ஐ.நாவினால் அந்த இலக்கை நிறைவுசெய்ய முடியவில்லை. யுத்தங்கள் இடம்பெற்று முடிந்த பின்னர் உடல்களை கணக்கெடுக்கும் வேலையைத்தான் ஐ.நா செய்து கொண்டிருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளை நம்பித்தான், தமிழ் தேசிய அரசியல் நகர்கின்றது. கடந்த பன்னிரெண்டு வருடங்கள் இப்படித்தான் நகர்ந்தது. ஒவ்வொரு மார்ச் மாதமும் கடிதங்கள் அனுப்புவது - யார் கடிதம் எழுதுவதென்று விவாதங்கள் செய்வது - இறுதியில் ஆளுக்கொரு கடிதங்கள் அனுப்புவது - இப்படியே பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தால் ஓர் அடியை கூட எடுத்து வைக்கமுடியவில்லை. ஐ.நாவின் பிரேரணைகளால் நாடுகளை கடடுப்படுத்த முடியாதென்பது அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

ஆனாலும் இந்த பிரேரணைகளை நம்பித்தான் அனைவருமே அரசியல் செய்ய முற்படுகின்றனர். இலங்கை வெளிநாடுகளின் உதவிகளை நம்பியிருக்கின்ற நிலையில், பொருளாதாரத்தை முன்வைத்து சில அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் கூட, சீனாவின் எழுச்சி சிறிய நாடுகளுக்கு புதிய நம்பிக்கையை கொடுத்திருக்கின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் உதவிகள் மறுக்கப்படுகின்ற நாடுகளுக்குள் பொருளாதாரத்தின் மூலம் நுழைவதற்கு சீனா தயாராக இருக்கின்றது. இதனால் மேற்கு நாடுகளும் ஒரு எல்லைக்கு மேல் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. எனவே நிலைமைகள் மிகவும் சிக்கலானதாக இருக்கின்றன. எனவே இந்த சிக்கலான சூழலில் ஐ.நாவின் அழுத்தங்களை மட்டும் நம்பிக்கொண்டு தமிழர்கள் இருக்க முடியுமா? ஐ.நாவை ஒரு பக்கமாக வைத்துக் கொண்டு, தமிழர் அரசியல் சமூகம் மாற்று வழிகள் தொடர்பில் சிந்திக்க முன்வர வேண்டும். அந்த மாற்று வழியென்பது இருப்பதை பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கி பயணிப்பதுதான். மாற்றுவழி தொரியாத வரையில், கைவசம் இருப்பதுதான் உண்மையான மாற்றுவழி.



# ரஷ்யாவின் இலக்கில் நானும் என் குடும்பமுமே முதலிடத்தில்

## மேற்குலகின் மெதுவான நகர்வு: உக்ரைன் ஜனாதிபதிக்கு ஏமாற்றம்

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

ரஷ்யாவின் கொலைப்பட்டியலில் நானும் என் மனைவியும் பிள்ளைகளுமே முதலாவதாக இருக்கிறோம். ஆபத்து நெருங்கிவரும் நிலையிலும் உக்ரைனைப் பாதுகாப்பதில் மேற்குலகம் இன்னமும் மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமளிக்கிறது.

உக்ரைன் நாட்டின் அதிபர் வோலோடிமிர் ஸெலென்ஸ்கி (Volodymyr Zelensky) நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஒன்றில் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளியிட்டிருக்கிறார். ரஷ்யப் படைகள் தலைநகரை அண்மித்துள்ள கட்டத்தில் தொலைக்காட்சியில் தோன்றிய ஜனாதிபதி தீவிரமான முகத்துடன் பரபரப்பாகத் தோற்றமளித்தார். ரஷ்யாவிடம் இருந்து உக்ரைனைப் பாதுகாக்க அவர் சர்வதேச உதவியைக் கோரியிருக்கிறார்.

நான் இன்னமும் தலைநகரிலேயே இருக்கிறேன். எனது குடும்பமும் உக்ரைன் மண்ணிலேயே உள்ளது. என்னை விட்டு செல்ல அவர்கள் ரும்பவில்லை. உளவு அறிக்கைகளின் படி சிறைபிடிக்க அல்லது கொல்லப்பட்ட வேண்டிய உக்ரைனியர்களின் பட்டியலில் நான் முதல் நம்பரில் உள்ளேன். எனது மனைவி, பிள்ளைகள் இரண்டாவது இடத்தில் இருக்கின்றனர்.

இவ்வாறு அவர் தனது நிலைமையை உருக்கமாக வெளிப்படுத்தி உள்ளார்.

நேற்று முன்தினம் இரவ அவர் கீவ் நகர வீதி ஒன்றில் பிரதமர் மற்றும் படைத் தளபதிகளுடன் தோன்றுகின்ற படம் ஒன்றைப் பதிவிட்டிருக்கிறார். "எங்கள் தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக நாங்கள் இங்கே இருக்கிறோம்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன் அதிகார மட்டத் தலைவர்களை கொல்லுவதற்கு அல்லது உயிருடன் பிடிப்பதற்கான திட்டங்களுடன் செச்சினியாவைச் சேர்ந்த "வேடர் படை" எனப்படும் விசேட ஆயுதப்படை அணியை ரஷ்யா களமிறக்கி உள்ளது என்ற தகவலை உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, அமெரிக்கா, அதிபர் வோலோடிமிர் ஸெலென்ஸ்கி எங்கிருக்கிறார் என்பதைத் தெரிந்துவைத்தவாறு அவருடன் தொடர்புகளைப் பேணி வருகிறது - என்று வெள்ளை மளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ஆயினும் உக்ரைன் அதிபரது தலை மீது வாள் போன்று தொங்கிக் கொண்டிருக்கின்ற ஆபத்தை மேற்குலகம் அதன் தீவிர கவனத்தில் எடுக்கவில்லை என்ற விமர்சனங்கள் பரவலாக எழுந்துள்ளன.

44 வயதான அதிபர் ஸெலென்ஸ்கி முன்னாள் பிரபல தொலைக்காட்சித் தொடர் நடிகர் ஆவார். கடந்த சில நாட்களாக அவர் இராணுவ உடையில் போர்ப் பகுதிகளில் தென்பட்டு வருகிறார். இதற்கிடையில் - தலை நகரத்தைப் பாதுகாக்க விரும்புவோருக்காக 18 ஆயிரம் இயந்திரத் துப்பாக்கிகளை உக்ரைன் அரசு நேற்று முன்தினம் வழங்கியிருக்கிறது. ரஷ்யப் படைகள் நகரை நெருங்கி வருவதால் எந்த நேரமும் தெருக்களில் மிக நெருக்கமான சண்டைகள் மூழலாம் என்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

18-60 வயதுக்கு இடைப்பட்ட ஆண்கள் நகரை விட்டு வெளியேறுவதை அதிகாரிகள் தடுத்துள்ளனர். பெண்கள்,குழந்தைகள் உட்பட பெரும் தொகையானோர் நகரில் இருந்து தொடர்ந்தும் வெளியேறி வருகின்றனர்.

ஆட்சி அதிகாரத்தை உங்கள் சொந்தக் கரங்களில் எடுங்கள். நியோ - நாஸி உக்ரைன் அரசுக் கும்பலை விட உங்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வருவது சுலபமானது என்று ஆட்சிக் கவிழ்ப்பு ஆலோசனை ஒன்றை உக்ரைன் நாட்டுப் படைகளிடம் முன்வைத்துள்ளார் புடின்.உக்ரைனியப் படைகளுக்கு மட்டுமான ஓர் உரையில் அவர் இவ்வாறு கேட்டிருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகள் சில புடின் சார்பு செய்தி நிறுவனங்கள், தொலைக்காட்சி சேவைகளை இடைநிறுத்தியதற்குப் பதிலடியாக ரஷ்யாவில் பயனாளர்கள் பேஸ் புக்கை அணுகுவதை அதிகாரிகள் கட்டுப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்

## 27.02.2022 – 05.03.2022

பெப்ரவரி. 27 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மாசி - 15
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் தீர்ந்து உற்சாகம் ஏற்படும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். சமூகத்தில் செல்வாக்கு உயரும். பணியிடத்தில் மற்றவர்களை அனுசரித்து நன்மை காண்பீர்கள். வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. பணவரவைப் பொறுத்தவரை பிரச்னை ஏதும் இருக்காது. ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். உற்சாகமான வாரம். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணவரவு, பொருள் சேர்க்கைக்கு வாய்ப்புண்டு. இந்த வாரம் நிதிநிலைமை நன்றாக இருக்கும். கடன்கள் தீரும். சேமிப்பு அதிகமாகும். நன்மைகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு நீங்கும். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. குடும்ப சந்தோஷத்துக்காகச் செலவு செய்து மகிழ்ச்சியடைவீர்கள். பணியிடத்தில் கூடுமானவரை பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். குடும்பத்தில் மன உளைச்சலை உண்டாக்கிய நிலை மாறி நிம்மதி மீளும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நன்மை அதிகரிக்கும். இளைஞர்கள் பயமின்றி தேர்வுகளை தைரியமாக எதிர்கொள்ளுங்கள். பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சிரமமான நேரங்களில் நண்பர்கள் உதவுவர். பழைய கடன்கள் அடைபடும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். தந்தைவழி உறவினர்களால் செலவு ஏற்படும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த விஷயம் சாதகமாக முடியும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உழைப்பு கூடுதலாகும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்ததை விடவும் கூடுதலாக இருக்கும். குடும்ப ஒற்றுமையால் மனதில் நிம்மதி பிறக்கும். பெண்களுக்குத் திருப்திகரமான வாரம். உடல்நிலை அற்புதமாக இருக்கும். பணியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். எதையுமே உழைப்பு மற்றும் விடா முயற்சி கொண்டே சாதிக்க வேண்டியிருக்கும். உடல்நலம் பாதிக்காமல் கவனமாக இருங்கள். வங்கிக்கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிப்பதில் இருந்த சிரமங்கள் மறையும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

திடீர் பணவரவு வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். எந்த விஷயத்திலும் அலட்சியம் இன்றி தெளிவாக முடிவெடுத்து வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வேலை செய்பவர்களுக்கு உற்சாகமான வாரம் இது. உங்களின் திறமை பளிச்சிடும். வீட்டிலும் அலுவலகத்திலும் மதிப்பும் மரியாதையும் கூடும். மாணவர்களுக்கு நினைவாற்றல் அதிகரிக்கும். தேர்வுக்காக சிரத்தையோடு படிப்பீர்கள். கணவன், மனைவி இடையே வாக்குவாதம் வரலாம். வருமானத்திற்கு குறைவிருக்காது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். வேலைக்கு நடுவே ஓய்வு எடுப்பது நல்லது. வாகனத்தில் போகும் போது மிதவேகம் அவசியம். நல்ல நண்பர்கள் பெரிய அளவில் உதவி செய்வார்கள். மாணவர்கள் முனைப்புடன் படித்து எளிதில் தேர்வுகளை எதிர்கொள்வர். பகைவர்கள் மன்னிப்பு கேட்டு சமாதானத்துக்கு வரக் கூடும். அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியாட்களிடம் பேசும் போது கவனமாக இருங்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் லாபம் வரத் தொடங்கும். மகிழ்ச்சியான வாரமாகவே இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு சாத்தியம் உள்ளது. தந்தையாரால் பெருமிதம் ஏற்படும். உங்களை மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ளாதபடி கவனமாகப் பேசுங்கள். மனதில் உற்சாகம் அதிகமாகும்படியான சம்பவம் நடக்கும். சகோதரர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். வேலையில் பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்களால் உதவி உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தேவையான அளவுக்குப் பணவரவு இருக்கும். வீண் செலவுகள் ஏற்படாது. குடும்பத்தில் சந்தோஷமாக இருப்பீர்கள். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தினர்களுடன் கவனமாக பேசவும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். பெரிய கவலை ஏதும் இருக்காது. பேச்சினால் நன்மை ஏற்படும். நண்பரால் தேவையான உதவி கிடைக்கும். குடும்பம், தொழிலை நிர்வகிப்பதில் வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பழைய பிரச்னை ஒன்று தீரும். செலவு வரத்தான் செய்யும். உறவினர் விமர்சனம் பற்றிய கவலை வேண்டாம் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். பேச்சில் கோபம் வராதபடி கவனமாக இருங்கள். இப்போது பகைவர்கள் போல நடப்பவர்கள் விரைவில் உதவி செய்வர். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். தேவையான உதவி கிடைக்கும். பெண்களின் பிரச்னைகள் தீரும். நிதி நெருக்கடிகள் அகலும். வங்கிக்கடனுக்கு முயற்சி செய்யலாம். விரய செலவுகளை தவிர்க்கவும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சொந்த பந்தங்களுடன் கூடி மகிழ்வீர்கள். கணவன் மனைவி இடையே நெருக்கம் கூடும். உடன் பிறந்தவர்களுடன் சச்சரவுகள் வராதபடி விட்டுக்கொடுங்கள். உடன்பிறப்பு மூலம் உதவி கிடைக்கும். இளைஞர்களுக்கு திருமணம் பற்றிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம். வேலையில் இருந்த பிரச்னைகள் தீரும். பிரச்னைகள் நீங்கி ஓரளவு நிம்மதி வரத் தொடங்கும். பழைய சம்பவங்களை நினைத்து அசைபோட வாய்ப்பு வரும். பண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு வாங்க முயற்சி செய்யலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வேலையில் இருந்த பிரச்னைகள் தீரும். நிதி நெருக்கடி ஏற்பட்டாலும் வருமானம் வந்து உங்களுக்குக் கை கொடுக்கும். மாணவர்கள் படிப்பில் சாதனை புரிய வாய்ப்புள்ளது. வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடுகள் வேண்டாம். இருக்கும் சரக்குகளை விற்று லாபம் பார்த்த பின்னர் புதிய சரக்குகளை வாங்கலாம். அன்பு நிறைந்த உறவினர்களைச் சந்திப்பீர்கள். வெளியூர் நண்பர்கள் உதவுவர். உறவினர்களிடம் இருந்த பிரச்னை நீங்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாக முடியும். வியாபாரம் வழக்கம் போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்னை நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். பணியாளர்களும் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம். எச்சரிக்கை, விழிப்புடன் செயல்பட்டால் பிரச்னையை தவிர்க்கலாம். நல்லவர்களின் உதவியால் எதையும் சமாளிப்பீர்கள்.

# முதுமைப் பகிர்வு

பகிர்வு -18

**கணபதி சர்வானந்தா**

முதுமை என்பது ஒரு பருவ மாற்றம் தான் என்று சொல்லப்படுகிறது.

பாலையாம் தன்மை போய், பாலனாம் தன்மை போய், காளையாம் தன்மை போய், காமுறு இளமை போய், மேலும் இவ்வியல் பினாலே, மேல் வரும் மூப்புமாகி என்று குண்டலகேசி கூறுகிறது.

பெரிய புராணத்தில் திருநீலகண்டருக்கும், அவர் மனைவிக்கும் வடிவுறு மூப்பு வந்தது என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார். மூப்பு என்றால் முதுமை. அழகு இளமையில் இருக்கும் முதுமையில் இராது என்றுதான் நாம் எண்ணிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் சேக்கிழாரோ மூப்பில் அழகு என்றார். வாழைக்காயை விட வாழைப்பழம் அழகானது. மாங்காயை விட மாம்பழம் அழகானது. காந்தியடிகள் சிறுவயதில் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை விட முதுமையில் பொக்கை வாயோடு காணப்படுகின்ற படமே மிகவும் அழகாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பழங்கள் நன்றாகப் பழுக்கவில்லை என்றால் அதனை வெம்பல் என்று பொருள் கொள்ளலாம் என வாரியார் சுவாமிகள் கூறுவார். வழுக்கை என்றால் வயதாகிவிட்டது என்பது அர்த்தமில்லை. இளமைக்குத்தான் வழுக்கை என்று பெயர். இளமையான தேங்காயைத்தானே வழுக்கை என்று கூறுகிறோம்.

எனவே முதுமை, பருவத்தை மாற்றுவதைப்போல எண்ணங்களையும் மாற்றலாம் என்ற அடிப்படையிலும், அனுபவச் செறிவு கூடிப் பல விடயங்களிலே மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற வகையிலும் அந்த முதுமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒருவரிடம் "உங்களிடம் என்ன மாற்றங்களை உணர்கிறீர்கள் ?" என்று கேட்டதற்கு அவர் அனுப்பிய பதில் இதோ..! இதுவும் ஒரு இணையப் பகிர்வே...

இதுவரை என் பெற்றோரை, என் உடன் பிறந்தவர்களை, என் மனைவியை, என் குழந்தைகளை, என் தோழர்களை நேசித்த நான் , இப்போது என்னை அதிகம் நேசிக்கத் தொடங்கி இருக்கிறேன்.

நான் இந்த உலகத்தை என் தோள்களில் சுமந்து கொள்ளவில்லை என்பதையும், நான் ஒரு "உலக வரைபடம்" அல்ல என்றதையும் நன்றாக உணர்ந்து கொண்டுள்ளேன்.

காய்கறி மற்றும் பழம் விற்கும் வியாபாரிகளிடம் பேரம் பேசுவதை நிறுத்தி கொண்டேன். தற்போதெல்லாம் அவர்களுக்குப் பத்து ரூபாயை அதிகமாகக் கொடுத்து விட்டேனே என்று என் மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. அவர்கள் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்காக அதனைக் கொடுத்ததாக என்னை நான் சமதானப்படுத்திக் கொள்ளுகிறேன்.

உணவகங்களில் "டிப்ஸ்" எனப்படும் சேவைக்காகக் கொடுக்கும் நன்கொடையை பார்த்தும் பாராமலும் அதிகம் கொடுக்கிறேன். அன்றாட வாழ்க்கையை நடத்த, என்னை விட அதிகமாகப் போராடும் அவர்களின் முகங்களும் மலரட்டுமே! என்று எண்ணிக் கொள்கிறேன்.

என்னிடம் அதிகம் பேசுகின்ற முதியவர்களிடம் "எத்தனை தடவை இந்தக் கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறீர்கள்?" என்று சலித்துக் கொள்வதில்லை. அவர்கள் இந்தக் கதைகளால், தமது பழைய நினைவுகளை அசை போடுகிறார் கள் கடந்த காலத்திலிருந்து விடுபடுகிறார்கள் என்றதை மனதாரா உணர்ந்து கொண்டுள்ளேன்.

சில நேரங்களில் பிறர் சொல்வது தவறு என்று தெரிந்தாலும், அவர்களைத் திருத்தாமலிருக்கக் கற்றுக் கொண்டேன். எல்லோரையும் திருத்தும் பொறுப்பு என்னுடையது அல்ல. எல்லோரும் சரியாக இருக்க வேண்டும் என்பதை விட என் மன அமைதியே எனக்கு முக்கியம் என்றதே எனது விளக்கம்.

நல்ல நடவடிக்கைகளைக் கண்டால் பெருந்தன்மையுடன், தாராளமாக அவற்றைப் பாராட்டுகிறேன். இது, பாராட்டுப் பெறுபவருக்கு மட்டுமல்ல, என்னுடைய மனதுக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களுக்குச் சின்ன ஆலோசனை ஒன்று - ஒருவர் உங்களைப் பாராட்டும்போது, ஒருபோதும் அதனை மறுக்காதீர்கள், நன்றி சொல்லி அதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் பாராட்டுவதை ஒரு தர்மமாக எண்ணிக் கொள்கிறேன்.

என்னுடைய ஆடையில் எண்ணெய்க் கறை பட்டு விட்டால் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் ஒருவனது வாழ்க்கையில் அவனது தோற்றத்தை விட அவனது ஆளுமைதான் உரக்கப் பேசுகிறது என்ற உண்மையை நான் நன்கு உணர்ந்து கொண்டுள்ளேன்.

என்னுடைய மதிப்பை உணராதவர்களிடம் இருந்து நான் விலகிப் போகிறேன். அவர்கள் என் மதிப்பை அறியாமல் இருக்கலாம், ஆனால் என்னை நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன்.

யாராவது பந்தயத்தில் என்னை முந்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, மோசமாகச் செயல் பட்டாலும் நான் அதனையிட்டு எந்த வித எதிர்வினையாற்றுவது கிடையாது. அதில் நான் நிதானமாகவே இருக்கிறேன். நான் பந்தயத்தில் இல்லை என்பதையும் நான் என் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்ற விடயத்தையும் அறிந்து வைத்திருக்கிறேன். என் உணர்வுகளை எண்ணிச் சங்கடப்படாமல் இருக்கக் கற்றுக் கொள்கிறேன். என்னை மனிதனாக்குபவை என் உணர்வுகள் மட்டுமே என்பது எனது முடிவு.

ஒரு உறவை முறித்துக் கொள்வதை விட, ஈகோ-வை விட்டு விடுவது நல்லது என்று அறிந்து கொண்டுள்ளேன். என் ஈகோ என்னைத் தனிமைப்படுத்தும், ஆனால் உறவுகளால் நான் தனிமைப்பட்டுப் போக மாட்டேன்.

ஒவ்வொரு நாளையும், இறுதி நாளைப் போல வாழக் கற்றுக் கொண்டுள்ளேன். இது எனது கடைசி நாளாகவும் இருக்கலாம் அல்லவா!

எனவே என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பவற்றைச் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய சந்தோசத்திற்கு நானே பொறுப்பு. மகிழ்ச்சி என்பது ஒரு தேர்வு. அதனைத் தேர்ந்தெடுத்து எந்த நேரத்திலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

# ஏற்படவிருந்த பெரும் அழிவுகளை தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்தினோம்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

நாட்டுக்குள் ஏற்படவிருந்த பெரும் அழிவு நிலைமையை, கொவிட் தடுப்பூசி வேலைத் திட்டத்தின் மூலமே கட்டுப்படுத்த முடிந்ததென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தை மையப்படுத்தி, நேற்றுமுன்தினம் வீடியோ தொழில்நுட்பத்தில் இடம்பெற்ற உலகளாவிய தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்துவதற்கான உயர்மட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

உலகளாவிய ரீதியில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சமத்துவமின்மை மற்றும் ஆபத்துமிக்க புதிய திரிபுகள் ஏற்படுவதற்குள்ள நிகழ்தகவு போன்றவற்றைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்து இடங்களிலுமுள்ள அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதே இந்தத் தொற்றுப் பரவலில் இருந்து மீள்வதற்குள்ள ஒரே வழியென்றும் அரச தலைவர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தார்.



இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் அப்துல்லா ஷாஹிட் மற்றும் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் ஆகியோர் கோவிட் தடுப்பூசி ஏற்றலிலுள்ள முக்கியத்துவம் மற்றும் இது விடயத்தில் பல்வேறு நாடுகள் செயற்பட்ட விதம் தொடர்பில் குறிப்பிட்டனர்.

இந்த விவாதத்தின் முதல் சுற்றின் போது தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகத்தில் எதிர்கொள்ளப்படும் சவால்கள், தரம், குறைந்தளவு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்த நாடுகளுக்கு அதிகளவில் விநியோகித்தல், விநியோக விகிதத்தை மேம்படுத்துதல் மற்றும் விநியோக முன்னறிவிப்பை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

விவாதத்தின் இரண்டாம் சுற்றின்போது, தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிவதோடு, உலகளாவிய தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம், மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம், தடுப்பூசிக் கூட்டமைப்பான ‘கவி’ இன் நிறைவேற்று அதிகாரி மருத்துவர் செத் பர்க்லி மற்றும் அரச தலைவர்களும் இதன்போது உரை நிகழ்த்தினர். (அ)



# மாவிட்டபுரத்தில் மோ.சைக்கிள் ரயிலுடன் மோதி ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 27

மாவிட்டபுரத்திலுள்ள பாதுகாப்பான ரயில் கடவையில் ரயிலுடன் மோதி நபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்தார்.

குறித்த நபர் ரயில் வருவதற்காக கடவை மூடப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்பட்ட வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சாந்தை - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த சதாசிவம் சசிக்குமார் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-3)

# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி நேற்று விசேட கலந்துரையாடல்

மன்னார், பெப். 27

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி இடம் பெற உள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரஷதீப், திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினர்,திணைக்களத் தலைவர்கள்,அரச-தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் உள்ளடங்கலாக அழைக்கப்பட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது எதிர்வரும் முதலாம் திகதி திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வு குறித்தும், முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம்,பாதுகாப்பு, குடிதண்ணீர் வசதி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் ஆலயத்துக்கு செல்லும் மக்கள் ஒரு வழி பாதை ஊடாக மட்டுமே ஆலய வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என குறித்த கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் நேற்று புதிய கட்டடத் திறப்பு விழா






வடமராட்சி, பெப். 27

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எம்.ஜே. எவ். அறக்கட்டளை நிதியம் மற்றும் லான் அண்ட் பார்பரா கரன் நிதியத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி நோயாளர் கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைபவ ரீதியாக இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக டெல்மா சிலோன் தேயிலை நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி, எம்.ஜே.எவ். அறக்கட் டளை நிதிய அறங்காவலர் டில்கான். சி. பெர் னாண்டோ மற்றும் லான் அண்ட் பார்பரா கரன் செனட்டர் லான் .கே. கரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டனர். (அ)

# பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு கோரி வட்டக்கச்சியில் கையெழுத்து வேட்டை



கிளிநொச்சி, பெப். 27

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் நேற்று காலை வட்டக்கச்சியில் நடைபெற்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரும் கையெழுத்துப் போராட்டம் பல பகுதிகளிலும் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று வட்டக்கச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தலைமையில் இந்த போராட்டம் இடம்பெற்றது. (அ-02)

# கலேவலவில் சொகுசு பஸ் லொறி மீது மோதி விபத்து

கொழும்பு, பெப்.06

கலேவல பகுதியில் சொகுசு பஸ் ஒன்று லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது வேகக்கட்டுப்பாட்டை இழந்த குறித்த பஸ் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை கலேவல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இணையவழி மோசடிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும்

## மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 27

தற்போது கணினி குற்ற விசாரணைப் பிரிவுக்கு நாளாந்தம் 15 முதல் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எனவே, இணையவழி மோசடிகள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

படங்களை காண்பித்து பெண்களை அச்சுறுத்தும் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் பிடியாணை இன்றி கைது செய்யப்படுவார்கள்.



அவர்களுக்கு சுமார் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (அ)

# மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் பகுதியில் 2 நாட்களில் 2,000 ஹெக்ரேயர் அபகரிப்பு

முல்லைத்தீவு, பெப்ரவரி 27

**முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரையான நிலப்பரப்பு கடந்த இரண்டு நாட்களுக்குள் இரகசியமாக முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக வனப்பாதுகாப்பு திணைக் களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் நட்டாங்கண்டல் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரையான நிலப்பரப்பு கடந்த இரண்டு நாட்களுக்குள் இரகசியமான முறையில் முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக வனப்பாதுகாப்பு திணைக் களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 75 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் வரையிலும் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 194 குடும்பங்களைச் சேர்ந்த 560 வரையானோர் வசித்து வருகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் நீண்டகாலமாக பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்த காணிகள் கடந்தகால யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் சிறு சிறு பற்றைக் காடுகளாகவும் காணப்பட்டன.

மீள் குடியமர்வின் பின்னர் மக்களால் துப்பரவு செய்யப்பட்டு பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற காணிகளும் இவ்வாறு வன வளத்திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது சிராட்டிகுளம், மூப்பன்குளம், பாலம்பிட்டி, நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் வனவளத் திணைக்களத்தினரால் சிராட்டிகுளம் முன்மொழியப்பட்ட வனப்பிரதேசங்கள் என்ற பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற கிராம அலுவலர்கள் மற்றும் அரச அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களோ அல்லது பிரதேச சபை உறுப்பினர்களோ எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை என்றும் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(அ)



# மன்னார் மாவட்டத்திலும் கையெழுத்து போராட்டம்

மன்னார், பெப். 26

நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் கையெழுத்துப் போராட்டம் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் என்ற போர்வையில் மனித உரிமைக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கக் கோரி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தின் பகுதியாக நேற்று மன்னாரில் பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் ,இரா. சாணக்கியன் நகரசபை ,பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், உட்பட பலரும் கலந்து கொண்டு கையெழுத்து போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

நவரசம் எனும் கவிதை நூல் வெளியிட்டமையின் காரணமாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அஹனாப்பும் கையெழுத்து போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் செயற்படவைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கக்கூடிய வகையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள செயற்படவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த தொழிற்சாலையை நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் இன்று பொருளாதார நெருக் கடியை எதிர்நோக்கியுள்ளதாக அந்த மக்கள் குறிப்பிட்டனர்.

மீள்குடியேறி 12 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டனர். (அ)

## நீடிக்கும் டொலர் தட்டுப்பாடு:

# 2,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, பெப். 27

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய சுமார் 2,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக அரிசி, பருப்பு, சீனி, உலர்ந்த மிளகாய் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# உக்ரைனில் உள்ள இலங்கையரை போலந்துக்கு செல்ல அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 27

இலங்கைக்கு செல்வதற்கு கோரிக்கை விடுத்துள்ள உக்ரைனில் உள்ள சில இலங்கையர்களை போலந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு செல்வதற்கு கோரிக்கை விடுத்துள்ள உக்ரைனில் உள்ள சில இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் போலந்து அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனுடன் தொடர்புடைய வகையில் துருக்கியின் அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகம் இதனை தெரிவித்துள்ளது.

இவ்வாறு விருப்பம் வெளியிட்டுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக போலந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் ஆர்.ஹசன் தெரிவித்தார்.

யுக்ரைனில் தற்போது 59 இலங்கையர்கள் உள்ளனர்.

அவர்களில் 20 பேர் யுக்ரைன் தலைநகர் கீவ்வில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மேலும் 249 பேர் குணமடைவு

கொழும்பு, பெப். 27

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 249 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 608,475 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 643,072 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# நாளை முதல் மீண்டும் மின் தடை!

கொழும்பு, பெப். 27

நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் மின்சார துண்டிப்பை நடைமுறைப்படுத்தப் படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றும், இன்றும் இரவு வேளைகளில் மின்சார துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

பகல்வேளையில் ஏ.பி மற்றும் சி வலயங்களில் 3 மணித்தியாலயங்களும், ஏனைய வலயங்களில் 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களும் மின் துண்டிக்கப்படும் என்று அவர் கூறினார். (அ)

# சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற போதைப் பொருட்களுடன் 193 பேர் கைது!

கொழும்பு, பெப். 27

போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற 193 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலை பருவ காலம் ஆரம்பமாகி சுமார் இரண்டு மாத காலத்துக்குள் போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலை தரிசிக்கச் சென்ற சுமார் 193 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளி பாதமலைக்கு போதைப்பொருட்கள் கொண்டு செல்வதனை தடுப்பதற்காக ஹற்றன் பொலிஸ் கோட்டத்துக்குட்பட்ட ஹற்றன், கொழும்பு, பலங்கொடை, பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா, தியகல, நோர்ட்டன் உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கேரள கஞ்சா, போதை மாத்திரைகள், தடை செய்யப்பட்ட சிகரெட்டுக்கள், மதன மோதகம், ஹெரோயின், உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது ஸ்டூட் என்ற பொலிஸ் மோப்பநாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.


இந்த நாயின் உதவியுடன் சுமார் 87 போதை பொருட்கள் வைத்திருந்த நபர்களை ஹற்றன் பொலிஸார் மாத்திரம் கைது செய்துள்ளதாகவும் கடந்த காலங்களில் ஹற்றன் பொலிஸ் நிலையத்திலிருந்து கோரா என்ற நாயின் குறைப்பாட்டை தற்போது உள்ள ஸ்டூட் மோப்ப நாய் நிவர்த்தி செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஹற்றன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சிவனொளிபாதமலை யாத்திரை செய்வதற்காக கேரளக் கஞ்சாவுடன் சென்ற 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களை ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து வருகை தந்தவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலானவர்கள் 22 வயதுக்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)




# உலகில் பெருகும் குருஷேத்திரங்கள்!



**- பகவான் சிங் -**
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

மகாபாரதத்தின் போர், ஒரு குருஷேத்ர களத்தில்தான் நடந்தது. ஆனால், இப்போதைய உலகில் பல குருஷேத்திரங்கள் உருவாகி வருகின்றன. இந்த இன்னல்களைப் பற்றி நான் உங்களுக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை. நீங்கள் போர் ரணங்களை எப்படியெல்லாம் தாங்கினீர்கள், ரௌத்திரத்தைக் கண்ணீரால் கழுவி, கூடி வாழ்ந்த உறவுகளை சுவரில் புகைப்படமாக்கி, மீண்டுவரும் எதிர்பார்ப்பு கானல் நீராய், நிழலற்று களைப்பில் நிற்கிறீர்கள். இந்த சோகத்திலும், ஏமாற்றத்திலும் எனக்கும் பங்குண்டு. ஏனெனில் உங்களுடன் நானும் நீண்டகாலம் பயணித்துள்ளேன், அந்த விடிவுகாலத்தைத் தேடி.

நம்மைச் சுற்றி சுழன்றுகொண்டிருக்கும் பிரச்னைகளில் மூழ்கிக்கொண்டிருப்பதால், நாம் உலகின் மற்ற இடங்களில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறோம். நம் வாழ்வு மட்டுமல்லாமல், நமது சந்ததியினரின் எதிர்காலத்தையும் பெரும்பாலான உலக நிகழ்வுகள் பாதிக்கும் என்பது கசப்பான வரலாற்று உண்மை என்பதையும் மறந்துவிடுகிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் உலகின் எல்லா நிகழ்வுகளும் அச்சு ஊடகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக நமக்கு உடனுக்குடன் செய்திகளாகக் கிடைக்கின்றன. அந்தத் தகவல்களை நாம் பயன்படுத்திக்கொள்வதில்லை. நமது குடும்பத்தினர், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோரிடம் நம்முடைய தேச எல்லைக்கு அப்பாற்பட்ட இடங்களில் நடக்கும் நிகழ்வுகள் நம்முடைய வாழ்வில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் விவாதிப்பது அவசியம்.

உக்ரைனை நோக்கி ரஷ்ய அதிபர் புடின் படைகளை அனுப்பியிருக்கிறார் என்பது பற்றி தொடர் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நான் அதைப்பற்றிப் பேசப்போவதில்லை. உக்ரைன் அதிபர் வோலோடிமிர் செலென்ஸ்கியிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்கவேண்டும் என்று உக்ரைன் இராணுவத்தினரிடமே புடின் கூறியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. “பனிப்போர் காலத்து மனநிலையை விடுத்து பேச்சு வார்த்தைக்கு நகர்ந்துவிடுங்கள், எல்லா நாடுகளின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இதை செய்யவேண்டும்” என்று, ரஷ்யாவின் நட்பு நாடான சீனாவின் அதிபர் ஜீ ஜின்பிங் புடினிடம் பேசியிருக்கிறார். ஆகவே, புடின் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும் செய்திவட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. பனிப்போர் மீண்டும் வந்துவிட்டது. இதில் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், முந்தைய பனிப்போர் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நடந்தது, இப்போது அமெரிக்கா-நேட்டோவுக்கும் சீனா தலைமையிலான நட்பு நாடுகளுக்கும் இடையில் பனிப்போர் மூண்டிருக்கிறது.

தெற்காசியாவைச் சேர்ந்த நமக்கு இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளின் கூட்டமைப்பான ‘க்வாட்’, இந்தப் பிராந்தியத்தில் ஊக்கத்துடன் செயல்படும் என்று நாம் எதிர்பார்த்திருந்தோம். குறிப்பாக, இந்தியப் பெருங்கடலில் சீனாவின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக க்வாட் அமைப்பு இலங்கையிலும் செயல்பாடுகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்தோம். இலங்கைத்தீவின் வடக்கு முனையில் தொடங்கிய சீனாவின் ஆதிக்கம், இப்போது கொழும்புக்கு சீன தூதர் வருகை தருவது வரை நீண்டுவிட்டது. ஜனநாயக உலகின் பல நாடுகளை சீனாவின் கடன் பொறி எப்படி விழுங்கியது என்பதைப் பற்றி உலக அளவில் பல விரிவான கட்டுரைகள் இருக்கின்றன எனவும், அவற்றைப் படியுங்கள் எனவும் உங்களிடம் பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உங்கள் சமூகம் மற்றும் சந்ததியினரைப் பற்றி அக்கறை இருப்பவர்கள் அவற்றைப் படித்துவிட்டு அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.

இப்போது பேச்சுவார்த்தையை முன்னிறுத்துவதாக சீனா நடந்துகொண்டாலும், ஜீ ஜின்பிங்கிடம் கலந்து ஆலோசிக்காமல் புடின் இந்த முடிவை எடுத்திருப்பாரா என்பது சந்தேகம்தான். உக்ரைன் மீதான படையெடுப்பு நடந்தால் க்வாட் கூட்டமைப்பு மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்காவின் தலையீடு குறையும் என்று ஜீ நினைத்திருக்கலாம். தவிர, சீனா-பாகிஸ்தான்-ரஷ்யா நட்புறவு அழுத்தமானதாகிவிட்டது, அமெரிக்கா தலைமையிலான நட்பு நாடுகளின் கூட்டணியை எதிர்க்கவும் அவர்கள் தயாராகிவிட்டார்கள். இந்த மிகப்பெரிய அரசியல் சூறாவளியில் கொழும்பின் இடம் கொஞ்சம் குழப்பமானதாக இருக்கிறது. அண்டை நாடான இந்தியா மற்றும் நீண்டகால நட்பு நாடான சீனா ஆகியவற்றுடன் இலங்கையின் உறவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதுபற்றி ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பலரும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு மாதிரி பேசி வருகிறார்கள். புடினின் படைகள் உக்ரைனுக்குள் நுழையத் தயாராகிக்கொண்டிருக்கும்போதே, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இரண்டு நாள் பயணமாக (பெப்ரவரி 23-24) தனது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மொஸ்கோ சென்றடைந்தார். அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு எதிரான கூட்டணி நட்புறவில் பாகிஸ்தானுடன் உறுதியாக இருக்கும் சீனா இந்தப் பயணத்துக்கு உதவியிருக்கக்கூடும் என்று சொல்லப்படு கிறது. முன்னாள் கிரிக்கெட் வீரரான இம்ரான் கான், “இங்கு நான் வந்திருப்பது மிகவும் உற்சாகமாக இருக்கிறது” என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். போர் நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் அவர் இவ்வாறு கூறுவது சமூக ஊடகங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது மட்டுமன்றி, இம்ரான் கானை வரவேற்க ரஷ்யாவைச் சேர்ந்த அமைச்சர்கள் யாரும் செல்லவில்லை, வெறும் அரசு அதிகாரிகள் மட்டுமே விமான நிலையத்தில் இருந்தார்கள் என்பதும் இந்திய ஊடகங்களால் கொண்டாடப்பட்டது. ஆனால், கடந்த 23 ஆண்டுகளில் மொஸ்கோவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல் பாகிஸ்தான் அதிபர் இம்ரான் கான் என்பது முக்கியமானது.

## ஐ. நா. பாதுகாப்பு சபையின் உக்ரைன் தீர்மானம்: இந்தியாவின் நிலைப்பாடு ‘குவாட்’ கூட்டமைப்பை பாதிக்குமா?

மறுநாள் புடினுக்கும் இம்ரான் கானுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தையின்போது இம்ரான் கான் காஷ்மீர் பிரச்னையைக் கையிலெடுத்தார். இது ஓர் உள்விவகாரம் என்று இந்தியா தொடர்ந்து கூறிவந்துள்ள போதிலும், கிடைக்கும் வாய்ப்புகளிலெல்லாம் பாகிஸ்தான் தலைமை இதை சர்வதேசப் பிரச்னையாக மாற்றவே முயற்சி செய்துவருகிறது. குறிப்பாக, நட்பு நாடுகளுடனான பேச்சுவார்த்தையில் காஷ்மீர் பிரச்னையைப் பாகிஸ்தான் தொடர்ந்து பேசிவருகிறது. தனது விருந்தினர் கூறுவதை அமைதியாகக் காதுகொடுத்துக் கேட்பதைத் தவிர புடினால் என்ன செய்துவிட முடியும்? இந்தியாவை ரஷ்யாவால் இப்போதைக்கு பகைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், மொஸ்கோவை மறுதலிக்கும் அமெரிக்கா-ஐரோப்பாவுடன் சேர மறுத்திருக்கும் அதே நேரத்தில், “வேறுபாடுகளைக் களைவதற்கான பேச்சுவார்த்தை தேவை” என்று மேலோட்டமாக பதிலளித்தபடி, மதில்மேல் பூனையாகவே இந்தியா செயல்படுகிறது. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பை எதிர்க்கும் ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலின் அறிக்கைமீதான வாக்கெடுப்பில் ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வாக்கு அளித்தது என்பதில் ஆச்சரியமில்லை, ஆனால், எதிரியான சீனாவுடன்

## ஸ்டாலினிடம் உதவிகோர, தனது லண்டன் நண்பர் சுரேனை மட்டும் இணைத்த சுமந்திரன்!

இணைந்து, இந்தியா வாக்கெடுப்பிலிருந்து விலகிவிட்டது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு அமெரிக்காவுக்கு அதிருப்தி அளிக்குமா, க்வாட் கூட்டமைப்பின் எதிர்காலத்தை பாதிக்குமா என்பதற்கெல்லாம் காலம்தான் பதில் சொல்லும். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளை வகுப்பவர்கள் எதிர்காலத்தைப் பற்றி ஆழமான சிந்தனையுடன் செயல்படுவதில்லை என்றே நான் பல ஆண்டுகளாக நம்பிவருகிறேன். உதாரணமாக, இலங்கையின்மீதான சீனப்பிடி இறுகும்போது அது தென்னிந்தியாவுக்குப் பெரிய அச்சுறுத்தலாக அமையும் என்று கூறினேன். நிதியுதவியை அதிகரிப்பதன்மூலம் சீனாவின் கடன் பொறியிலிருந்து இலங்கையை மீட்க இந்தியா முயற்சி செய்துவருகிறது, ஆனால் இது போதுமானதா, காலம் கடந்துவிட்டதா என்ற ஓர் அச்சம் இருக்கத்தான் செய்கிறது. ‘இலங்கை கடும் பிரச்சனைக்குள் மூழ்குவதால் மக்களின் கோபம் அதிகரிக்கிறது’ என்ற தலைப்பில் ‘டெய்லி மிரரி’ன் செய்தியைப் படித்தவுடனேயே கண்ணீர் வந்துவிட்டது. உணவு, எரிபொருள், அந்நிய செலவாணி போன்ற பல துறைகளில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஜமீலா ஹூசைன் எழுதியிருந்த அந்த செய்திக்குறிப்பில், ‘கடனுக்காக இந்தியாவை நோக்கிப் பயணிக்க இருக்கும் நிதியமைச்சர்’ என்று கூறப்பட்டிருந்தது. கடமைகளை செய்யத்தவறிய அரசாங்கத்தின்மீது மட்டுமல்லாமல், தவறுகளை சுட்டிக்காட்டவேண்டிய எதிர்கட்சிகளும் எதுவும் செய்யவில்லை என்பதால் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்று அவர் செய்திக்குறிப்பில் கூறியிருந்தார். இந்த அழகான தீவு நாட்டில், போரின் ரணங்களிலிருந்து இன்னும் ரத்தம் வடிந்துகொண்டுதான் இருக்கிறது என்பது கவலையளிக்கும் உண்மை.

ஜமீலாவின் செய்திக்குறிப்பு கவலையளித்த அதே நேரம், சிட்னியின் இன்பத்தமிழ் ஒன்லைன் யூரியூப் சனலைச் சேர்ந்த என் இனிய நண்பரான பிரபாகரன், ரெலோவின் லண்டன் பிரதிநிதி சாம் சம்பந்தனிடம் எடுத்திருந்த பேட்டி, கடுமையான கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருந்தது. தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்றும் உலக தமிழர் பேரவை (ஜி. ரி. எவ்) ஆகிய அமைப்புகள் பெப்ரவரி 18ஆம் திகதி தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு ஓர் அறிக்கை மூலமாக கோரிக்கை மனுவை அனுப்பியுள்ளன. தமிழ்நாட்டில் சிறந்த முறையில் நிர்வாகம் செய்துகொண்டிருப்பதற்காக அவரைப் பாராட்டியதோடு, ஈழத்தமிழர் நலனுக்காக எடுத்த பல முடிவுகள் மூலமாக ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டியதற்காகவும் அவர்கள் வாழ்த்து தெரிவித்திருக்கின்றனர். தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் எம். ஏ. சுமந்திரனும் . ஜி. ரி. எவ் அமைப்பின் சார்பில் சுரேன் சுரேந்திரனும் கையெழுத்திட்டிருக்கும் இந்த அறிக்கையை நீங்கள் படித்திருக்கக்கூடும். சிட்னி பிரபாகரனின் பேட்டியையும் இன்பத்தமிழ் ஒன்லைனில் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். பார்க்காதவர்கள் உடனே அதைப் பார்த்துவிடுங்கள்.

பேட்டியின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலையீட்டைக் கோரிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிகளை சீர்குலைக்க கொழும்புடன் சேர்ந்து சுமந்திரன் சதிவேலையில் ஈடுபட்டு வருவதாக சாம் குற்றம் சாட்டியுள்ளார். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட பல தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதால் மட்டுமே பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தில் தமிழரசு கட்சித் தலைவர் சம்பந்தன் கையெழுத்திட்டார்.

டெல்லியிடமிருந்து உதவி பெறும் முயற்சியை சுமந்திரன் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். இந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்கா நிவாரணமும் உரிமைகளும் சேர்ந்த ஒரு சூப்பரான மீட்புத் திட்டத்தைத் தரும் என்று இரு மாதங்களுக்கு முன்பு சுமந்திரன் கூறினார். “அந்த அமெரிக்க உதவி எங்கே?” என்று பேட்டியில் கேள்வி எழுப்பிய சாம், சுமந்திரன் தனிச்சையாக செயல்படுவதாகவும் குற்றம் சாட்டினார். அமெரிக்கா, கனடா, பிரிட்டன் விஜயம், ஜி. ரி. எவ். அமைப்புடனான இந்த கூட்டு அறிக்கை போன்ற பல விஷயங்களில் ஈடுபடுவதற்கு முன்பாக பிற தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களை சுமந்திரன் கலந்து ஆலோசிக்கவில்லை என்றும் சாம் குற்றம் சாட்டினார்.

ஸ்டாலினிடம் உதவி கோருவதற்கான நோக்கத்தைக் குறைகூற முடியாது என்றாலும், லண்டனில் இருக்கும் தனது நண்பர் சுரேனைத் தவிர வேறு யாரையும் சேர்த்துக் கொள்ளாமல் சுமந்திரன் இதில் தனியாக இறங்கியுள்ளார். செல்வம் உட்பட பிற தமிழ்தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் இதுகுறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர். தமிழ்தேசிய கூட்டமைப்பு - ஜி. ரி. எவ். ஆகியவற்றின் கூட்டறிக்கைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தொடர்பில்லை என்றும் கூறியுள்ளனர். தங்களது தலைவர்களின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளும் வேலையை என்னுடைய ‘ஈழநாடு’ நண்பர்களிடமே நான் விட்டுவிடுகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளில் இரண்டு முக்கியமான அம்சங்கள் தெரிகின்றன. அவற்றில் பெரிய ஆச்சரியமில்லை, டிசம்பர் 2016இல் ஜெயலலிதா இறந்தபோது இது நடக்கும் என்று நான் முன்பே எழுதியிருந்தேன். இந்த தேர்தலில் ஆளும் தி. மு. க. அபார வெற்றியும், எம். ஜி. ஆர் ஜெயலலிதாவின் அண்ணா தி. மு. க. கடும் சரிவையும் சந்தித்திருக்கிறது. அதோடு, பா. ஜ. க மெதுவாக தலையெடுத்திருப்பதையும் கண்டோம். இதைப்பற்றியெல்லாம் கொஞ்சம் விரிவாகவே உங்களிடம் நாளை பேசுவதற்கு நம் ஆசிரியரிடம் ஒரு மனுவைத் தந்திருக்கிறேன். நீங்களும் சிபாரிசு செய்தால் நன்றாக இருக்கும். நன்றி, வணக்கம்.

# உக்ரைனில் ரஷ்யாவின் உக்கிரம் ஏன்?



**நா. சோமசுந்தரம்**

லியோ டால்ஸ்டாய் தனது 'போரும் அமைதியும்' நாவலின் இறுதியில், "உலகநாடுகள் தமக்குள்ளேயே சட்ட ஒழுங்கை ஏற்படுத்தி அதை முறையாக அமல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அணுஉலை நாசத்தால் அழிய நேரிடும்" என்றார். டால்ஸ்டாயின் தீர்க்கம் பலிக்காதிருக்கக் கடவதாக!

லியோ டால்ஸ்டாய் தனது 'போரும் அமைதியும்' நாவலை இவ்வாறு தொடங்குகிறார், "நல்லது இளவரசே! ஜெனோவும் லுக்காவும் தற்போது நெப்போலியன் போனபார்ட்டின் குடும்பத்தின் வசமுள்ள நிலப்பரப்புகள் அன்றி வேறில்லை."

உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பிராந்தியத்திலிருந்து 2014ஆம் ஆண்டிலிருந்து தன்னாட்சி உரிமை கோரி வரும்டானெட்ஸ்க் மற்றும் லுகன்ஸ்க் மாகாணங்களுக்கு சில நாட்களுக்கு முன்பு ரஷ்யா முறையான அங்கீகாரம் அளித்தபோது, எனக்கு 'போரும் அமைதியும்' நாவலின் முதல் வரிகள்தான் நினை வுக்கு வந்தன.

**ரஷ்யாவுக்கு ஏன் பதற்றம்?**

ரஷ்யாவின் நிலப்பரப்பு கற்பனைக்கு எட்டாத வகையில் மிகவும் பெரியது. 17 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 36,000 கி.மீ கடலோரத் தையும் 11 வெவ்வேறு நேரப் பகுதிகளையும் (time zones) கொண்ட தாக அது பிரமிக்க வைக்கிறது. ஆனால் பரப்பளவில் தன்னைவிடச் சிறிய நாடான உக்ரைனின் ஆதரவையும் நிலப்பரப்பையும் இழப்பதற்கு ரஷ்யா ஏன் பதற்றப்பட வேண்டும்? இதற்கான விடை புவியியல் அமைப்பில் உள்ளது.

ரஷ்யாவின் கடலோரப் பரப்பு அத்தனை நீளமான தாக இருந்தும் அதன் முழுமையான நீளம் வடதுருவம் வரை பரவியிருப்பதால் வருடம் முழுவதும் கடல் உறைந்தே இருக்கிறது. இதன் காரணமாக கடல் வணிகத்துக்கு ஏற்ற நல்ல துறைமுகங்கள் அமைவதற்கு இயற்கை கை கொடுக்கவில்லை. கடல் வணிகம் வருடம் முழுவதும் நடை பெறவும், தெற்குப் பகுதிகளுக்கு பண்டமாற்றுத் தொடர்புக்கும், வருடம் முழுவதும் நீர் உறையாத துறைமுகங்கள் அவசியம். இதற்கு ரஷ்யா விடம் உள்ள ஒரே விடைதான் உக்ரைன். ஏனெனில் உக்ரைனின் கடற்பரப்பு கருங்கடலில் அமைந்துள்ளது. மேலும் கருங்கடல் வழியாக மத்திய தரைக்கடலை அடைந்து மற்ற நாடுகளுக்கு உக்ரைன் கடல் வணிகம் செய்ய முடியும்.

ஒருங்கிணைந்த ரஷ்யாவின் (சோவியத் யூனியன்) வீழ்ச்சிக்குப் பிறகு ரஷ்யப் பகுதிகளுக்கு அருகேயுள்ள உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் போன்ற நாடுகள் ரஷ்ய சார்பு நிலையை மேற்கொண்டன. ஆனால் ஐரோப் பியப் பகுதிகளுக்கு அருகே அமைந்துள்ள ருமேனியா, லித்துவேனியா போன்ற நாடுகள் ஐரோப்பிய மேலை நாடுகள் மற்றும் நேட்டோவின் சார்பு நிலைப்பாட்டை மேற்கொண்டன. நடுப்பகுதியில் அமைந்த உக்ரைனின் கிழக்குப் பகுதி ரஷ்ய சார்பு நிலைப்பாட்டையும், மேற் குப்பகுதி ஒருங்கிணைந்த ஐரோப்பிய சார்பு நிலைப் பாட்டையும் மேற்கொண்டன.

**செவஸ்டபுல் துறைமுகம்**

உக்ரைன், புவியியல் ரீதியாக தனக்குதெற்கில் உள்ள கிரிமியாவில் செவஸ்டபுல் எனும் துறைமுகத்தை பெற்றிருந்தது. ரஷ்ய - உக்ரைன் புரிந்துணர்வின்படி ரஷ்யா அந்தத் துறைமுகத்தை குத்தகைக்கு எடுத்திருந் தது. பதிலுக்கு உக்ரைனின் இறையாண்மையை ரஷ்யா காப்பதாக உறுதியளித்தது. ரஷ்யாவின் தற்போதைய பதற்றம் என்னவென்றால், ஒருங்கிணைந்த ஐரோப்பா அல்லது நேட்டோ நாடுகளுடன் உக்ரைன் சேர்ந்து விட்டால் இந்தத் துறைமுகத்தை நிரந்தரமாக இழக்க நேரிடும் என்பதுதான்.

செவஸ்டபுலைத் துறைமுகமாகக் கொண்டு செயல் பட்டாலும் மத்திய தரைக்கடலுக்குச் செல்வதற்குத் துருக்கியின் கட்டுப்பாட்டில் உள்ள பாஸ்ஃபரஸ் கால்வாயை ரஷ்யா பயன்படுத்தித் தான் ஆகவேண்டும். நேட்டோ உறுப்பு நாடானதுருக்கி இதுவரையிலும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் ரஷ்யாவை அனும தித்து வருகிறது. ஆனால் சர்வதேசஅழுத்தம் காரணமாக எப்போது வேண்டுமானாலும் ரஷ்யாவுக்கு அனுமதி மறுக் கப்படலாம். உக்ரைனை மேலை நாடுகள் பக்கம் செல் லாதவாறு ரஷ்யா தடுப்பதற்கு இதுவே முக்கியக் காரணம்.

உக்ரைனின் நிலைப்பாடு எப்போதும் மதில்மேல் பூனையாகவே இருந்துள்ளது. 2013ஆம் ஆண்டில் உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக முனைப்பு காட்டிய போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் விரைந்து நடவடிக்கை எடுத்து கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்து, செவஸ்டபுல் துறைமுகத்தை தனதுமுழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். அதன் பிறகு உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான திட்டத்தைக் கைவிட்டது. கிரிமியாவையும் அது இழந்தது.

**திருகு சுருள் - எதிர்வினை**

கிரிமியாவை ரஷ்யாவுடன் 2013 இல்இணைக்கும் போது புதின், ஒரு நேர்காணலில், "ஒரு திருகு சுருளை (spring) நீங்கள் ஒரு அளவுக்கு மீறி அழுத்தினால் அது உங்களைத் திருப்பி பலமாகத் தாக்கும். நீங்கள் இதை நினைவில் கொள்ள வேண்டும்" என்றார்.

2021ஆம் ஆண்டுக்கு வருவோம். உக்ரைன் நேட்டோ வின் உறுப்பு நாடாகவிரும்புகிறது. அப்படி ஆகிவிட்டால் அமெரிக்கா ரஷ்யாவை கடல்வணிகத் தில் இருந்து துண்டிக்க உக்ரைன், ருமேனியா, துருக்கி போன்ற நாடுகளின் உதவியுடன் அமெரிக்கா முயற்சி மேற்கொள்ளும். திருகு சுருளை அளவுக்கு மீறி அழுத்தி னால் திருப்பி பலமாக தாக்கும் அல்லவா? அந்த எதிர் வினையைத்தான் ரஷ்யா இப்போது செய்து வருகிறது.

இதற்கு புதின் கற்பிக்கும் நியாயம், உக்ரைனில் ரஷ்யக் குடிகள் இன அழிப்புக்கு ஆளாவதை தடுக்கவே இந்தப் படையெடுப்பு என்கிறார். ஐரோப்பிய ஒன் றியமோ நேட்டோ நாடுகளோ உக்ரைனின் உதவிக்கு வருமா என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும். ஆனால் அதற்குள் திருகு சுருள் தனது எதிர்வினையை ஆற்றி முடித்துவிடும்.

இதிலிருந்து நாம் கற்கும் பாடமானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தில், அந்நாட்டின் கடல் வணிகம் மூலம் பெறும் 'நீலப்பொருளாதாரம்" எவ்வளவு முக்கியம் என்பதுதான். நமது நாட்டின் 7600 கி.மீ கடலோரப் பரப்பில் 12 முக்கியத் துறைமுகங்களையும், எண்ணற்ற சிறு துறைமுகங்களையும், உள்நாட்டு நீர்ப்போக்கு வரத்தையும் மேம்படுத்துவதன் மூலமாக நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தலாம்.

உக்ரைனின் பெரும் பகுதியை ரஷ்ய படைகள் தங் கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன. அந்த நாட்டு தலைநகர் கீவில் உக்ரைன், ரஷ்ய படைகள் இடையே நேற்றுமுன்தினம் நீண்ட நேரம் கடுமையான சண்டை நீடித்தது. போர் தீவிரமானதால் பெரும் பதற்றம் எழுந்திருக்கிறது.

ரஷ்ய இராணுவத்தின் உளவுப் பிரிவான ஜி.ஆர். யு. வின் கட்டுப்பாட்டின் கீழ் ஸ்பியட்நாஸ் என்ற கமாண்டோ படை உக்ரைன்ராணுவ வீரர்களின் உடை யில் பதுங்கிகொரில்லா முறையில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.தலைநகர் கீவின்முக்கிய பகுதி களை கைப்பற்றிவிட்டதாக ரஷ்ய இராணுவ வட்டா ரங்கள் நேற்று முன்தினமே அறிவித்தன.

இந்த சூழலில் தலைநகர் கீவின் மையப் பகுதியை ரஷ்ய படைகள் நெருங்கின. அப்போது உக்ரைன், ரஷ்ய படைகள் இடையே நீண்ட நேரம் சண்டை நீடித்தது.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில், உக்ரைனில் உள்ள செர்னோபில் அணு உலையை ரஷ்யா தன் வசப்படுத்திவிட்டதாக செய்தி வெளியானது.

லியோ டால்ஸ்டாய் தனது 'போரும் அமைதியும்' நாவலின் இறுதியில், "உலகநாடுகள் தமக்குள்ளேயே சட்ட ஒழுங்கை ஏற்படுத்தி அதை முறையாக அமுல் படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அணுஉலை நாசத் தால் அழிய நேரிடும்" என்றார். டால்ஸ்டாயின் தீர்க்கம் பலிக்காதிருக்கக் கடவதாக! ■





ஈழநாடு



# நான் உலக அழகியாக இருந்தாலும் எனக்கு கைகொடுத்தது கல்விதான்



**வி.ரி.சகாதேவராஜா**

நான் உலக அழகியாயிருந்தாலும் எனக்கு கைகொடுத்தது கல்விதான். இலங்கைக்கு முதல் தடவையாக விஜயம் செய்துள்ளேன். இலங்கை இயற்கை எழில் மிகுந்த வளமான நாடு. கனிவான மக்கள்.நல்ல விருந்தோம்பல் பண்பு. இலங்கையை எனக்கு நன்கு பிடித்துள்ளது. எனது பூர்வீகம் இலங்கைதான். அதுவும் நாவிதன்வெளி. எனது பாட்டனார் ராஜசிங்கம் அதிபராயிருந்து படிப்பித்த பாடசாலைக்கு இன்னும் உதவுவோம். மக்களுக்கும் நிறைய உதவுவோம்.

இவ்வாறு கூறுகிறார் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேசஅழகி (Miss International UJ -2020-2022) செல்வி இவஞ்சலின் லட்சுமணர்.

ஆசியாவிலிருந்து இந்த உயர் விருதுக்குத் தெரிவான முதல் பெண் இவஞ்சலின். 21வயதேயான இவஞ்சலின் நடிப்பு மற்றும் தொலைக்காட்சி துறையில் கனடாவில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர். லண்டனில் இவங்சலின் பெஷன் லிமிட்டட் (Evanjelin Fashion Ltd) நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் இயக்குனராகவும் இருக்கிறார். சிறந்த ஒரு பரோபகாரி. தமிழ் ஓரளவுதெரிகிறது. லண்டனில் பிறந்துவளர்ந்தவர். அழகியல் துறையில் சிறந்துவிளங்கும் இவர் ரெனிஸ் கூடைப்பந்து கிரிக்கட் காற்பந்து வலைப்பந்து போன்ற விளையாட்டில் தலைமைத்துவத்தை வகித்து சாம்பியான விருதுபெற்றவர்.

*2017-18* வருடத்திற்கான Miss Teen Great Britain CROWN பெற்றவர். *2016-17*இல் Miss Junior Teen Great Britain CROWN 1st runnerup பெற்றவர்.

லண்டன் பிஷப் சொலனரில் நடைபெற்ற 18வயதுக்குட்பட்ட பெண்களுக்கான காற்பந்தாட்டத்தில் மிட்லண்ட கப்பை வென்றெடுத்தவர். அதேவேளை கிரிக்கட்ட சுற்றுப்போட்டியிலும் மிட்லண்ட கப் (Midland cup) பெற்றவர்.

எதிர்வரும் அக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பிரித்தானிய உலகஅழகி இவஞ்சலினை நாவிதன்வெளியில் சந்தித்து பேசினோம்.

நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் (தேசியபாடசாலை) அவரால் நிறுவப்பட்ட 10அடி உயர சரஸ்வதி சிலையை கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திறந்துவைத்தார்.

1970களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கம் அவர்களின் பேத்தியான இவர் பிரித்தானியாவின் அழகுராணியாக மூன்று தடவைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



முள்ளாள் அதிபர் ராஜசிங்கத்தின் மகன் ஜீவராஜூ சாந்தி ராஜகருணா தம்பதியினரின் மகளான உலகஅழகுராணி இவஞ்சலின் லண்டனில் பிறந்து வளர்ந்தவர். கிரிக்கட் வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் அழகுக்கலையில் முத்திரைபதித்தவர்.

ராஜசிங்கத்தின் குடும்பத்தினர் இப்பிராந்தியத்தில் வசதியில்லாத மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல் பாடசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமுகசேவை




## ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அழகி இவஞ்சலின் லட்சுமணர்

களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதன் ஓரங்கமாக இப்பாடசாலையில் 10அடி உயர சரஸ்வதி சிலை நிறுவ நிதியுதவி நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் நாவிதன் வெளியைச்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேச அழகி செல்வி இவஞ்சலின் லட்சுமணர் இதற்கென இலங்கை வந்திருந்தார். அவருடன் அவரது தாயார் சாந்திராஜகருணாவும் வருகைதந்தனர். இலங்கை சுற்றுலா அதிகாரசபை அவர்களுக்கான விருந்தினர் அங்கீகாரத்தை வழங்கியுள்ளதுடன் கூடவே அதன் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

முன்னதாக அதிதிகள் பாண்ட் வாத்தியம் சகிதம் மாலைசூட்டி பூச்செண்டு வழங்கி கோலாகலமாக வரவேற்கப்பட்டனர்.

பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட்ட சரஸ்வதித்தாயின் சிலை திறப்புவிழா வித்தியாலய அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக சரஸ்வதித்தாயின் சிலையை உலக அழகுராணி இவஞ்சலின் திறந்துவைக்க சிலைக்கான நினைவுபடிமக்கல்லை அவரது தாயார் சாந்திராஜகருணா திரைநீக்கம் செய்துவைத்தார்.

தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி ஜெயரஞ்சினி தயாபரன் வரவேற்புரைவழங்க சிரேஸ்டஆசிரியர் நடராஜா கோடீஸ்வரன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தித் தொகுத்தளித்தார்.

சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலை இணைப் பாளருமான வி.ரி.சகாதேவராஜா கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் விசேட உரை நிகழ்த்தினார்.

மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. உலகஅழகி வருகைதந்து அவர் நிருமாணித்த சரஸ்வதி சிலையைத் திறந்துவைத்தமைக்காக உலக அழகி இவஞ்சலின் அவரது தாயார் சாந்தி ஆகியோருக்கு பாடசாலைச் சமுகம் பொன்னாடை போர்த்துக்கௌரவித்தது. உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா அவர்களுக்கு நன்றியுடன்கூடிய வாழ்த்துப்பத்திரத்தை வழங்கிவைத்தார்.

பின்னர் உலகஅழகி இவஞ்சலின் "வணக்கம் நன்றி" எனும் வார்த்தைகளை தமிழில் பேசி உரையை ஆங்கிலத்தில் பேசினார். சகோதார இனத்தைச்சேர்ந்த அவரது தாயார் சாந்தி ராஜகருணா தமிழில் அழகாக உரையாற்றினார். பாடசாலைக்குத் தேவையான மேடை மற்றும் ஒலிபெருக்கி வசதிகளையும் செய்துதருவதாக அவர் உறுதியளித்தார்.உபஅதிபர் பி.ஜெகதீசன் நன்றியுரையாற்றினார். உலகஅழகியின் உறவினரான ஆசிரியை சிவானந்தி ருபனின் விருந்துபசாரமும் இடம்பெற்றது.

விழாவில் உலக அழகி இவஞ்சலின் பாட்டனார் முன்னாள் அதிபர் ராஜசிங்கத்திற்கு ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டர். அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் அக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலக அழகி தெரிவுப் போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பிரித்தானிய உலக அழகி இவஞ்சலின் வெற்றிபெறவேண்டி அங்கு இறை பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.

அதன் பின்னர் அவர்களால் குடியிருப்புமுனையில் நிருமாணிக்கப்பட்ட வீடொன்றினை வசதிகுறைந்த குடும்பமொன்றிற்கு வழங்கிவைத்து அதற்கான தளபாடங்களையும் வழங்கிவைத்தனர்.

உலக அழகியின் உறவினரான ஆசிரியை சிவானந்தி ருபனின் வீட்டில் வைத்து உலக அழகியுடன் நேர்முகத்திற்காக சந்தித்தேன். அவருடன் அவரது தாயார் சாந்தி ஜீவராஜூம் உடனிருந்தார்.

**கேள்வி:** நீங்கள் இலங்கைக்கு வருவது இது முதல் தடவையா? இலங்கை விஜயம் எப்படி அமைந்தது?

**பதில்:** இதுதான் இலங்கைக்குவரும் முதல் பயணம். எனது அம்மா பிறந்த காலி தொடக்கம் எனது அப்பா பிறந்த நாவிதன்வெளி வரை இதுவரை இரண்டரை வார கால பயணத்தில் சுகமான அனுபவம் பெற்றேன். நாளை யாழ்ப்பாணம் சென்று மீண்டும் கொழும்பு செல்லவிருக்கிறேன்.

இலங்கை வளமான நாடு. நல்ல மக்கள்.எங்கும் இன்முகத்தோடு வரவேற்கும் நல்ல உள்ளம்கொண்ட மக்கள்.

**கேள்வி:** கண்டி தலதா மாளிகைக்கும் சென்றதாக அறிகிறோம்..

**பதில்:** ஆம் அழகான வணக்கஸ்தலம். அங்கு பெருவரவேற்புமளித்தார்கள். கண்டியன் சாறி அணிந்து மகிழ்ந்தேன்.

**கேள்வி:** நாவிதன்வெளியில் உங்களுக்கான வரவேற்பு எப்படி இருந்தது?

**பதில்:** உச்சக்கட்ட மனம்பிடித்த வரவேற்பு. சரஸ்வதி சிலையை நானும் தாயாரும் திறந்துவைக்க கிடைத்தது ஒரு வரப்பிரசாதம்.நல்ல விருந்தோம்பல். எனது பாட்டனார் ராஜசிங்கம் லட்சுமணர் அதிபராயிருந்து கற்பித்த நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திற்கு என்ன உதவி தேவையென்றாலும் செய்வோம். அங்கு மேடை ஒலிபெருக்கி தேவையென்றார்கள். அதனைச்செய்ய சித்தமாயிருக்கிறோம்.மேலும் உதவி செய்யக்காத்திருக்கிறோம்.

**கேள்வி:** பாடசாலைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?

**பதில்:** நான் உலக அழகியாயிருந்தாலும் எனக்கு கைகொடுத்தது கல்விதான்.

**(16 ஆம் பக்கம் பார்க்க...)**

ஈழநாடு



# உங்கள் வளர்ச்சிக்கு கைகொடுக்கும் ‘வருத்தம்!’



**வருத்தத்தை உணர்வது சுலபம். ஆனால், அதை விவரிப்பது கடினமான காரியம். ஒருவருடைய எண்ணம் அல்லது ஆசைக்கு எதிரான நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது தோன்றும் விரும்பத்தகாத உணர்வே வருத்தம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.**

“வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்’ என்று பலரும் சொல்லிக் கேட்டிருப்போம். ஆனால், வருத்தப்படுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி டேனியல் ஹெச் பிங்க் என்பவர் ‘தி பவர் ஆஃப் ரிக்ரெட்’ என்னும் புத்தகத்தில் விளக்கமாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தில் அவர் சொல்லியிருக்கும் முக்கியமான விஷயங்களைப் பார்ப்போம்.

நேர்மறை உணர்ச்சிகள் (பாசிட்டிவ் எமோஷன்ஸ்) மனிதனுக்கு மிகவும் அவசிய மான ஒன்று. அவை இல்லாவிட்டால், மனிதன் இந்த உலகம் தருகிற அழுத்தமான சூழலில் காணாமல் போய்விடுவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றன. நல்லது நடக்கும் என்ற எண்ணம் மற்றும் நாம் படுகிற கஷ்டங்களுக்கு எல்லாம் விடிவு பிறக்கும் என்பது போன்ற பாசிட்டிவ் சிந்தனைகளே மனிதர்களைச் சாதிக்க வைக்கின்றன. நம்பிக்கை நம்முடைய உடல்நலத்தைச் சிறப்பாக இருக்க வைக்கிறது. மகிழ்ச்சி, நன்றியறிதல், நம்பிக்கை போன்ற எண்ணங்கள் நம்முடைய வாழ்வில் நலத்தை (well being) அதிகரிக்கச் செய்கிறது.

நம்மிடம் இருக்கும் எதிர்மறை எண்ணங் களைவிட அதிக எண்ணிக்கையிலான நேர்மறை எண்ணங்களே நம்மைத் தொடர்ந்து முயற்சி செய்ய வைக்கிறது என்கிறபோதிலும், ஒரேயடியாக நேர்மறை எண்ணங்கள் மட்டுமே நம்முள் பீரிட்டு எழுந்தால் என்னவாகும்? நம்முடைய தவறுகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள அதுவே பெரிய அளவில் தடையாக நிற்கும். இது நம்முடைய வளர்ச்சியைத் தடுக்கும். இவை இரண்டும் இணைந்தால் நாம் நம்முடைய திறனுக்கேற்ற வளர்ச்சியை எட்ட முடியாமல் போகும். இதனாலேயே நம்முள் நேர்மறை எண்ணங்களும் எதிர்மறை எண்ணங்களும் ஒரு கலவையாய் சரியான விகிதத்தில் இருக்க வேண்டியது கட்டாயமாகிறது. இதனால்தான் மனிதர்களுக்கு எதிர்மறை எண்ணங்கள் உதவியாக இருக்கின்றன” என்கிறார் ஆசிரியர்.

எதிர்மறை எண்ணங்களே நாம் பிழைக்க உதவியாக இருக்கின்றன. இது இல்லாமல் வெறுமனே நேர்மறை எண்ணங்கள் மட்டுமே நமக்கு இருந்தால் நம்முடைய வீட்டுக்கு நாமே தீ வைத்துப் பார்ப்போம். பாம்புக்கு பயப்பட மாட்டோம். நினைத்ததை எல்லாம் செய்ய முயல்வோம் இல்லையா? நெருப்பு மிகவும் பாதிப்பை உருவாக்கக்கூடியது என்பதாலேயே நாம் அதைக் கவனமாகக் கையாள் கிறோம். பாம்பு கடித்தால் இறந்துவிடுவோம் என்ற எதிர்மறை எண்ணம் மனதில் இருப்பதாலேயே பாம்பைப் பார்த்து பயப்படுகிறோம். கெட்ட விஷயங்கள் குறித்த வெறுப்பே அதில் சிக்காமல் இருக்க நமக்கு உதவுகிறது.

எதிர்மறை எண்ணங்கள் பலனுள்ளதாக இருந்தாலும், அவை அளவுக்கு அதிகமாகப் போனால் அவை நம்மை பல வீனப்படுத்தி முடக்கிப் போட்டுவிடவே செய்யும். அதே போல், எதிர்மறை எண்ணங்கள் மிக மிக குறைவாக நம்மிடத்தில் இருந்தால், அதுவும் நம்மை ஒரேயடியாய் ஆடவைத்து அழித்து விடும். எதிர்மறை எண்ணங்கள் (நெகட்டிவ் எமோஷன்ஸ்) நம்மிடம் அதிகமாகும் போது நமக்கு வருத்தம் தோன்றுகிறது” என்று பக்கா லாஜிக்குடன் இந்தப் புத்தகத்தை ஆரம்பிக்கிறார் ஆசிரியர்.

வருத்தம் குறித்து 70 ஆண்டுக் காலத்துக்கும் மேலாக ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த ஆராய்ச்சி முடிவுகள் இரண்டு முக்கிய மான விஷயங்களை இந்த உலகுக்குத் தந்துள்ளது. முதலாவது விஷயம், வருத்தமே மனிதனை மனிதனாக இருக்கச் செய்கிறது. இரண்டாவது கண்டுபிடிப்பு, வருத்தமே நம்மை முன்னேற்றமடையச் செய்கிறது என்று சொல்லும் ஆசிரியர், இந்தப் புத்தகத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தின் முதல் பிரிவு, மனித வாழ்வில் வருத்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குவதாக உள்ளது. இரண்டாவது பிரிவு, எதற்காக மனிதர்கள் வருந்துகிறார்கள் என்பது குறித்து அலசுகிறது. மூன்றாவது பிரிவு, நம்முடைய வருத்தத்தை மாற்றி அமைத்து வெற்றிக்கான பாதைக்கு உதவச் செய்வது எப்படி என்பது குறித்து விளக்கமாகச் சொல்கிறது.

**வருத்தம் என்றால் என்ன?**

வருத்தத்தை உணர்வது சுலபம். ஆனால், அதை விவரிப்பது கடினமான காரியம். ஒருவருடைய எண்ணம் அல்லது ஆசைக்கு எதிரான நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது தோன்றும் விரும்பத்தகாத உணர்வே வருத்தம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். வருத்தம் என்பது ஒரு விஷயம் குறித்து முடிவெடுக்கும் நபர் அவர் எடுத்த அல்லது எதிர்பார்த்த முடிவுக்கும் நிஜத்தில் நடந்த முடிவுக்கும் (நிகழ்வுக்கும்) இடையே உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் அமைவதாகும்.

வருத்தம் குறித்த ஆய்வில் பெரும்பாலானோர் சொன்னது, “எனக்குப் பிடித்த விஷயத்தைச் செய்யாமல் என் பெற்றோருக்குப் பிடித்த விஷயங்களைச் செய்ததால், எப்படியோ இருந்திருக்க வேண்டிய நான் இன்றைக்கு இப்படி இருக்கிறேன்” என்பதுதான். “நான் எனக்குப் பிடித்த விஷயத்தைச் செய்து, பெரிதாக முன்னேற்றம் காணவில்லை என்றாலுமே வருத்தப்பட்டிருக்க மாட்டேன்” என்கிற மனநிலையில் நாம் வாழ்வது முரண்பாடான எண்ணம்தான். உதாரணமாக, இப்படிச் சொல்லும் நபர் ஒருவேளை செய்ய வாய்ப்பு கிடைத்தால், எப்படி இருக்கும்? அவருக்குப் பிடித்த படிப்பை படித்த பின் தற்போதிருக்கும் நிலையிலேயே இருப்பதைப் பார்த்து, அவர் மகிழ்ச்சியுடனும் நிறைவுடனும் இருப்பார். ஏனென்றால், அவருக்குப் பிடித்ததைச் செய்து, சாதாரண நிலையில் இருப்பதைவிட பிடிக்காததைச் செய்து அதே நிலையில் இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

இதை இன்னோர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர். பாப் மற்றும் டேவிட் என்ற இரண்டு சிறுவர்கள் பள்ளிக்கு சைக்கிளில் செல்கிறார்கள். போகும் வழியில் ஒரு குளம். அதை இடது புறமாகவும் சுற்றி பள்ளிக்குச் செல்லலாம். வலது புறமாகவும் சுற்றி பள்ளிக்குச் செல்லலாம். இரண்டு வழி களிலும் ஒரே அளவிலான தூரத்தையே கடக்க வேண்டும்.

எல்லா நாள்களிலுமே அந்த நீர்நிலை வரை ஒன்றாகச் சேர்ந்து வரும் இருவரில் நீர்நிலை வந்த பின்னால் பாப் வலது புறச் சாலையிலும், டேவிட் இடது புறச் சாலையிலும் சென்று பள்ளியை அடைவார்கள். ஒரு நாள் இரவு அடித்த காற்று மற்றும் மழையில் வலது புறம் உள்ள சாலையில் ஒரு மரம் கீழே விழுந்து கிடந்தது. பாப் வழக்கம் போல் வலது புறச்சாலையில் செல்லும்போது மரத்தின் கிளை விழுந்து கிடப்பதைக் கவனிக்காமல் கடக்க முயல தவறி சைக்கிளில் இருந்து கீழே விழுந்து அடிபட்டது. அன்றைக் கென பார்த்து டேவிட்டும் வலது புறச் சாலையிலேயே செல்ல அவனும் மரக்கிளை தடுமாறி கீழே விழ நேர்ந்தது.


இந்த இருவரில் அந்த விபத்து குறித்து யார் அதிக அளவில் வருத்தப்பட்டிருப்பார்கள் என்ற கேள்வியை, வருத்தம் குறித்து ஆராய்ச்சி செய்யும் ஆய் வாளர்கள் 7 வயதுக் குழந்தைகளிடம் கேட்க அதற்கு அவர் களில் பெரும்பாலானவர்கள் கூறிய பதில் ‘டேவிட்’ என்பது தான்.

ஆனால், இதே கேள்வி ஐந்து வயதுக் குழந்தைகளிடம் கேட்கப் பட்டபோது அவர்களில் பெரும் பாலானோர் இருவருமே ஒரே மாதிரியான வருத்தத்தை அடைந் திருப்பார்கள் என்றே சொன்னார்கள். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

நம்முடைய வயது அதிகரிக்க அதிகரிக்க, நாம் பல்வேறு விஷயங்களுக்குக் காரணிகளைக் கண்டு பிடித்து பழி போட பழகிக்கொள்கிறோம். என்னுடைய பெற்றோர் படிக்கச் சொன்னதால், இந்தப் படிப்பைப் படித்துவிட்டு இப்போது சீரழிந்துகொண்டிருக் கிறேன் என்று சொல்லும் நபர், பின் குறைவாக வருத்தப்படுவது போல, கொஞ்சம் ஆழமாக யோசித்துப் பார்த்தால், உங்கள் வருத்தம் பெரிதாகக் குறைந்துவிடும் என்கிறார் ஆசிரியர்.

எனக்கு வருத்தமே கிடையாது என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள். அது ஒரு வியாதிக் கான மனநிலை. மனிதன் சாதாரணமாக இருந்தால், அவனுக்கு வருத்தம் என்ற ஒன்று கட்டாயம் இருக்கவே செய்யும். மனிதர்கள் தாங்கள் செய்யாமல் விட்ட விஷயம் குறித்து அதிக அளவில் வருத்தம் கொள்வார்கள். அதாவது, தன்னுடைய இயலாமை குறித்து மட்டுமே அதிகம் வருத்தப் படுவார்கள். சுற்றுச்சூழல் காரண மாக ஒருவரால் ஒரு விஷயத்தைச் சாதிக்க முடியாது போனால், அவருக்குப் பெரிய அளவில் அந்த சுற்றுச்சூழல் குறித்த வருத்தம் இருக்காது. இதனாலேயே நாம் நம்முடைய வாழ்க்கையை அடிக்கடி திரும்பிப் பார்த்து, நான் அதை அப்போது அப்படிச் செய் திருக்கலாம், இப்படிச் செய்திருக் கலாம் என யோசித்து யோசித்து பெரிய அளவில் கவலைப் படுகிறோம் என்கிறார் ஆசிரியர்.

**(16 ஆம் பக்கம் பார்க்க)**



தினக்குரல்



# தலசீமியா நோய் எதனால் ஏற்படுகிறது?

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை
சிறுபிள்ளை வைத்திய நிபுணர் வைத்தியர்
பீ.எம். அர்ஷாத் அஹமட்

## தலசீமியா நோய் தொடர்பில் வழங்கியுள்ள நேர்காணல்



**தலசீமியா (Thalassemia)நோய் என்றால்என்ன?**

தலசீமியா என்பது ஒருவகை இரத்தச் சோகை நோயாகும். உலகில் உயிரோடு பிறக்கின்ற 10 ஆயிரம் குழந்தைகளில் 4.4 சதவீதமான குழந்தைகள் இந்த நோயோடுதான் பிறக்கின்றனர். அது மாத்திரமல்லாமல், உலகில் வாழுகின்ற மக்களில் சுமார் 5 சதவீதமான மக்கள் இந்த நோயை உண்டுபண்ணும் மரபணு மாற்றங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்நோயோடு வாழுகின்ற 3500 பேர் இப்போது எம்மத்தியில் இருக்கின்றனர். இதேபோல் இந்த நோயை உண்டாக்கக் கூடிய மரபணு உடையவர்கள் நோய்க் காவிகளாக (carriers) கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் எமது நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய, வடமத்திய, வடமேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

உடலிலுள்ள குருதியில் சிவப்பணுக்கள் RBC, வெள்ளையணுக்கள் WBC, குருதிச் சிறுதட்டுக்கள் PLATELETS என்ற மூன்று வகை கலங்கள் காணப்படுகின்றன. இதில் நிறமுள்ள பதார்த்தமாக RBC இருப்பதாலேயே எமது குருதி இரத்தச் சிவப்பு நிறமாகத் தெரிகிறது. தலசீமீயா என்பது இரத்த சிவப்பணுக்களோடு தொடர்புபட்ட ஒரு பரம்பரை நோயாகும். இந்த இரத்தச் சிவப்பணுக்கள் உரிய காலத்திற்கு முன் தொடர்ந்து அழிவடைவதால் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோயில் பல படிநிலைகள் உள்ளன.

**இந்நோயின் படிநிலைகளைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், பெரும் தலசீமியா (thalassemia major) - இது மிக ஆபத்தான படி நிலையாகும். இந்நிலைக்குள்ளாகியவர்கள் கடுமையான இரத்தச் சோகைக்குள்ளாகி விடுவார்கள். அவர்கள் உயிர்வாழ்வதற்கு தொடர்ந்து இரத்தம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். இது பெரும் தலசீமியா எனப்படும்.

அறிகுறிகள் அற்ற மற்றும் சிறு தலசீமியா இரண்டுக்கும் இடைப்பட்ட, நிலைமாறும் இடைத்தலசீமியாவும் உள்ளது. இவைகள் ஆபத்து குறைவானவையாகும். எந்த வகை தலசீமியாவாக இருந்தாலும், அவை எல்லாமே மரபு வழிப்பட்ட இரத்தக் கோளாறுகள் மூலமே உருவாகின்றன. அதாவது, பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு மரபு வழியாக கடத்தப்படுவதன் மூலம் ஏற்படுகின்றது. குறிப்பாக, பெற்றோர் இருவருமே குறைபாடுள்ள மரபணு உடையவர்களாக இருப்பின் அவர்களின் குழந்தைகளுக்கு பெரும் தலசீமியா கொண்டவர்களாக இருப்பார்கள்.

இக்குறைபாடுடைய மரபணுவின் தோற்றம் மத்திய தரைக்கடல் பகுதி என்று வரலாற்று அடிப்படையில் நம்பப்படுகிறது. எனவேதான் தலசீமியா என்று பெயர் வந்தது. கிரேக்க மொழியில் தலஸ் என்றால் கடலாகும். கடலே இல்லாத குருநாகல் பிரதேசத்தில் இந்தவகை நோயாளிகள் அதிகம் காணப்படுவது போல, இலங்கை உட்பட ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளிலும் இந்த நோய் பரவி காணப்படுகிறது.

**இந்நோய்க்கான காரணம் என்ன?**


ஒருவருக்கு RBC இல் உள்ள இரத்தப் புரதம் (ஹீமோகுளோபின் Hb) தேவையான அளவைவிடக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

தலசீமீயாவில் RBC ஏன் அழிவடைய வேண்டும்? இதற்கு என்ன காரணம்?

அழிவுக்குக் காரணம் சிவப்பணுவின் (RBC) நிலைப்பாற்றலைத் தடுக்கும் ஒரு மரபுக்கோளாறாகும். இம்மரபுக் கோளாறு மரபணுக்கள் மூலமாக பெற்றோரிடம் இருந்து குழந்தைக்கு கடத்தப்படுகிறது. பெற்றோர்களில் யாராவது ஒருவரிடம் இருந்து குறைபாடுடைய இரத்தப் புரத மரபணுவையும், மற்றவரிடம் இருந்து இயல்பான மரபணுவையும் பெற்றுக்கொள்ளும் ஒருவர் பொதுவாக நோய் கடத்துபவர் காவி என்று அழைக்கப்படுகின்றனர். நோய் கடத்துபவருக்கு மிதமான இரத்தச் சோகையைத் தவிர வேறு எந்த அறிகுறியும் காணப்படுவதில்லை. அவருக்கு இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை வருவதில்லை. ஆனாலும் அவர் குறைபாடுள்ள மரபணுவைக்கொண்டு காவிக் கொண்டிருக்கிறார். இதனாலேயே அவர் காவி என்று அழைக்கப்படுகிறார்.

HbA என்று அழைக்கப்படும் இயல்பான இரத்தப்புரதம் நான்கு புரதச் சங்கிலியைக் கொண்டுள்ளது. அதாவது, இரண்டு ஆல்பா புரதங்களும், இரண்டு பீட்டா புரதங்களும் இவ்விரு வகை புரதச் சங்கிலிகளில் உள்ள மரபுக் குறைபாட்டின் அடிப்படையில் இரண்டு பெரும் தலசீமியாக்களான ஆல்பாவும், பீட்டாவும் பெயரிடப்படுகின்றன. இது ஆண்களையும், பெண்களையும் சம அளவில் பாதிக்கும் நோயாகும்.

போதுமான பீட்டா குளோபின் புரதச் சங்கிலியை உருவாக்க இரண்டு மரபணுக்கள் (பெற்றோர் ஒவ்வொருவரிடமும் இருந்து ஒவ்வொன்று) தேவைப்படுகின்றன. ஒன்றிலோ அல்லது இரண்டு மரபணுக்களிலுமோ மாற்றம் ஏற்பட்டால் பீட்டா தலசீமியா உண்டாகிறது. மாற்றம் நிகழ்ந்த மரபணுக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பீட்டா தலசீமியாவின் அமைகிறது. இரண்டு மரபணுக்களும் பாதிக்கப்பட்டால் பெரும் தலசீமியாவும் கடுமையான இரத்தச் சோகையும் ஏற்படுகின்றன. ஒன்று பாதிக்கப்பட்டால் தலசீமியா மைனர் காவி நிலை உருவாகிறது.




அதுபோல் ஆல்பா குளோபின் சங்கிலியை இரண்டு மரபணுக்கள் உருவாக்குகின்றன. நான்கு மரபணுக்களில் இரண்டு பாதிக்கப்படும்போது ஆல்பா தலசீமியாவின் நோய்க்கூறு தோன்றுகிறது. மூன்று பாதிக்கப்பட்ட மரபணுக்களைக் கொண்ட நோயாளிக்கு இரத்தப் புரத நோய் HbH ஏற்படுகிறது. அவர்கள் பெரும்பாலும் பிறப்பதற்கு முன்னர் அல்லது சற்றுப் பின்னர் இறந்து விடுவார்கள்.

**தலசீமியா மைனர் என்றால் என்ன?**

நோயைக் காவியாக இருக்கும் ஒரு நிலையை தலசீமியா நோய்க்குறிகள் அற்ற சிறு தலசீமியா என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகளுக்கு ஒரு சில பிரச்சினைகளே இருக்கும். இவர்கள் இயல்பாக வாழ்க்கை நடத்துவார்கள். பெரும்பாலனவர்கள் இவ்வாறான ஒரு நோய் தமக்கு இருப்பது தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மேலும், இடைத் தலசீமியா நோயாளிகள், பெரும் அல்லது சிறு தலசீமியா நோயாளிகளைப் போன்றோ அல்லது அதற்கு இடைப்பட்ட ஒரு தொங்கு நிலையிலோ இருப்பார்கள். பொதுவாக பெரும் தலசீமியா நோயாளிகளைப் போன்று இவர்களுக்கு இரத்தச் சோகை கூடுதலாக இருக்காது. இருப்பினும் பலருக்கு சிலவேளைகளில் இரத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். இவர்களுக்கு உடலில் இரும்புச்சத்து அதிகமாகக் கூடிய அபாயம் இருப்பதால் மருந்துகள் கொடுத்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

**பெரும் தலசீமியா நோயாளிகளின் நிலை என்ன?**

பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு இரத்தச் சோகையின் அறிகுறிகள் ஒரு வயது வருவதற்கு முன்பே தென்படத் தொடங்கும். இரத்தப்புரதம் மிகவும் குறைவதால் அவர்களுக்கு அதிகமான பிரச்சினைகள் உண்டாகும்.

**இரத்தச் சோகையின் அறிகுறிகள் என்ன?**

களைப்பு, சோர்வு, நிறம்வெளிருதல், மூச்சுத்திணறல், மூச்சுவிடுதலில் சிரமமும் கூடுதலான இதயத்துடிப்பும் இருக்கும். இந்நிலை கடுமையானால் மாரடைப்பும் ஏற்படலாம். அதாவது, இரத்தத்தில் ஒக்சிஜனின் அளவு குறைவதே ஆகும். இப்பிரச்சினைகளின் தீவிரமும், இரத்தப் புரதத்தின் அளவையும் பொறுத்து அறிகுறிகளின் தீவிரமும் அமையும்.

மேலும், பலவீனமான உருக்குலைந்த எலும்புகள், மண்ணீரலிலும் கல்லீரலிலும் வீக்கம், குறைவான உடல் வளர்ச்சி, காலம் கடந்து பருவமடைதல் போன்ற அறிகுறிகள் இருக்கும். குறிப்பாக, தொடர்ந்து இரத்தம் பாய்ச்சுவதால் இரும்புச்சத்து மிகையாகி அதன் மூலம் பக்க விளைவுகளும் ஏற்படும்.

**தலசீமியாவை கண்டறிவது எவ்வாறு?**

தலசீமியாவைக் கண்டறிய சிறப்பு இரத்தப் பரிசோதனைகள் தேவைப்படும். சாதாரணமாக செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளில் குடீஊ யில் இரத்தச் சோகையின் அளவு Hb level, சிவப்பணு குறியீடுகள் MCV, RDW போன்றவற்றை வைத்து ஓரளவு அறிந்து கொள்ளலாம். மேலும், Blood picture போன்ற பரிசோதனைகள் மூலமும் தலசீமியா இருக்கிறதா இல்லையா என்பதை ஓரளவு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பீட்டா தலசீமியாவுக்கும் வேறுசில இரத்தப் புரத மரபுக் கோளாறுகளுக்கும் பொதுவாக HPLC எனப்படும் சோதனை பரிந்துரைக்கப்படுகிறது. ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளாக இருப்பின் ஒரு வயது முடிந்தபின் இச்சோதனைகள் நடத்தப்பட வேண்டும். நோயாளிக்கு இரத்த மாற்றம் செய்யப்பட்டிருந்தால் இச்சோதனைகளினால் பயனில்லை. எனவே இரத்தம் பாய்ச்சுவதற்கு முதல் இந்தப் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்களின் இரத்தப் பரிசோதனை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே குழந்தைக்கு தலசீமியா இருக்கிறதா இல்லையா என்பதை மருத்துவரால் அறிந்துகொள்ள முடியும்.

**இதற்கான சிகிச்சை என்ன?**

இந்த நோயின் வகையையும், அதன் தீவிரத்தன்மையையும் பொறுத்தே சிகிச்சை செய்யப்படுகிறது. நோய் அறிகுறி இல்லாத தலசீமியா காவிகளுக்கு சிகிச்சை தேவையில்லை. ஆனால் அவர்கள் இன்னொரு தலசீமியா நோய்க்குறி இல்லாத காவிகளை திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு பெரும் தலசீமியா கொண்ட குழந்தை பிறப்பதற்கான அபாயம் இருப்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# வைரலாகும் சமந்தாவின் படம்!




தமிழ், தெலுங்கு என பல மொழிகளில் கொடிக்கட்டி பறக்கும் நடிகை சமந்தாவின் அடுத்த பட முதல் பார்வை வெளியாகி பிரபலமாகி வருகிறது.

சமந்தா நடிப்பில் தமிழ், ஹிந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக இருக்கும் திரைப்படம் ”சாகுந்தலம்”. சமந்தாவுடன் இணைந்து தேவ் மோகன், அதிதி பாலன், அனன்யா நாகள்ளா, பிரகாஷ்ராஜ், மோகன் பாபு, கபீர் பேடி, மதுபாலா போன்ற பல முன்னணி நடிகர்கள் இதில் நடித்துள்ளனர். சாய் மாதவ் வசனங்கள் எழுத, குணசேகர் இந்தப் படத்தை எழுதி இயக்கியிருக்கிறார். காளிதாசன் எழுதிய சாகுந்தலத்தை தழுவி இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

சாகுந்தலையாக சமந்தா நடித்திருக்கும் இப்படத்தின் முதல்பார்வையை படக்குழு வெளியிட்டது. இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்த முதல்பார்வை சமூக வலைத்தளங்களில் பிரபலமாகி வருகின்றது.



# இனி பிரிக்க மாட்டார்கள்!

“இன்னும் சில வருடங்களில் தென்னிந்திய நடிகர்கள், வட இந்திய நடிகர்கள் என யாரும் பிரித்துப் பேச மாட்டார்கள்” என்று நடிகை ரெஜினா தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: “தமிழ், தெலுங்கில் இருந்து வரும் நடிகர்களை தென்னிந்திய நடிகர்கள் என அழைக்கும் போக்கு இருக்கிறது. அது தொந்தரவாக இருக்கிறது. அது இழிவுபடுத்தும் நோக்கில் சொல்வதில்லை என்றாலும் அதைக் கேட்கும் போது வருத்தமாக இருக்கிறது.

’அப்படி சொல்வதை நிறுத்துங்க’ என்று கூற வேண்டும்போல் இருக்கிறது. தென்னக என்ற முத்திரை இல்லாமல், நடிகர், நடிகை என்று அழைக்கலாமே? இந்தியளவிலான படங்கள் இப்போது அதிகம் தயாராவதால் இன்னும் சில வருடங்களில், தென்னிந்திய நடிகர்கள், இந்தி நடிகர்கள் என்று பிரித்துச் சொல்வது மாறிவிடும் என்று நம்புகிறேன்”.



# கமலின் அடுத்த இயக்குநர்?

கமல் அடுத்து கதை கேட்டு சம்மதம் செய்திருக்கும் இயக்குநர் யார் தெரியுமா? கிராமியக் கதைகளில் களமாடும் முத்தையா. ‘விருமாண்டி’ படத்துக்குப் பிறகு நல்லதொரு கிராமத்துக் கதையில் நடிக்க ஆசைப்பட்ட கமல், அது குறித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் பேசியிருக்கிறார்.

தகவல் முத்தையாவுக்குப் போக, ‘என்னிடம் ஒரு கதை இருக்கிறது. கமல் கேட்பாரா?’ என்றாராம். அடுத்த சில நாள்களிலேயே கமலிடமிருந்து அழைப்பு வர, இரண்டு மணி நேரம் ஆளையே கட்டிப்போடும்படி கதை சொல்லி அசத்தியிருக்கிறார் முத்தையா. விரைவில் கமல் - முத்தையா இணைவு குறித்த அறிவிப்பு வெளியாகவிருக்கிறது!

# அம்மாவைப் போல மகளும்

யூ ரியூப் பிரபலமாக ஆரம்பித்தபின் பல்வேறு விதமான புதிய விடயங்கள் திரைத் துறை சார்ந்து நடந்த வருகிறது. குறும்படங்கள் ஒரு காலத்தில் அதிகமாக ஆக்கிரமித்திருந்தன. அண்மை நாட்களாக அல்பங்கள் புதிது புதிதாக வர ஆரம்பித்துள்ளன. தமிழில் ஏற்கெனவே இது மாதிரியான சில அல்பங்கள் வெளிவந்து ரசிகர்களின் வரவேற்பையும் பெற்றுள்ளன.



இருந்தாலும் அவற்றில் முன்னணி நடிகர்கள், நடிகைகள் அதிகம் நடிப்பதில்லை. ஆனால், தெலுங்கில் முக்கியமான நடிகைகளில் ஒருவராக இருக்கும் கீர்த்தி சுரேஷ் “காந்தாரி“ என்ற அல்பத்தில் நடனமாடி நடித்துள்ளார். இந்தப் பாடல் காணொலி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே, இனிவரும் நாட்களில் முன்னணி நடிகைகளும் இவ்வாறான முயற்சிகளில் இறங்கலாம்.

# சரத்குமார் 150



சரத்குமாரின் 150ஆவது படத்துக்கு ‘தி ஸ்மைல் மேன்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தை ஷ்யாம் - பிரவீன் ஜோடி இயக்கவுள்ளது. க்ரைம் த்ரில்லர் பாணியில் உருவாகும் இப்படத்தில் சரத்குமார் அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு காவல்துறை அதிகாரியாக நடிக்கிறார்.

இப்படம் குறித்து ஷ்யாம் - பிரவீன் ஜோடி கூறும்போது, “படத்தின் சரத்குமார் அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர் தன் நினைவுகளை முழுமையாக இழக்கும் முன் ஒரு முக்கிய வழக்கை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தப் படம் பார்வையாளர்களுக்கு ஒரு த்ரில் அனுபவமாக இருக்கும்” என்றனர்.

இப்படத்தில் சரத்குமாருடன் சிஜா ரோஸ், இனியா, ஜார்ஜ் மரியான், உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | வலிமை |
| இயக்கம் | : | விநோத் |
| நடிப்பு | : | அஜித்குமார், ஹூமா குரேஷி கார்த்திகேயா |
| இசை | : | யுவன்ஷங்கர் ராஜா |




போதைப் பொருள், தவறான சில இளைஞர்கள், அவர்களை வழி நடத்த ஒரு தலைவன், அவர்களைக் கண்டுபிடிக்க முயலும் ஒரு காவல்துறை அதிகாரி இதுதான் ‘வலிமை’.

கொலம்பியாவிலிருந்து கடல் வழியாக போதைப் பொருளை ஒரு கும்பல் வழக்கமாகக் கடத்துகிறது. அவர்களிடமிருந்து போதைப் பொருளைக் கொள்ளை யடித்து இங்கு இளைஞர்கள் மூலம் விற்கும் வில்லன் கார்த்திகேயா. வெறும் போதைப் பொருளை மட்டும் கடத்தாமல், சங்கிலி பறிப்பு, ஆட்கள் கொலை என்று ‘டார்க் வெப்’ மூலம் செய்கிறது கார்த்திகேயா தலைமையிலான கும்பல். சென்னைக்குப் புதிதாக உதவி பொலிஸ் ஆணையராக பொறுப்பேற்கும் அஜித்குமார் அந்த கும்பலைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். அதில் அவர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஸ்மார்ட்டான உதவி பொலிஸ் ஆணையாளராக அஜித்குமார். அவர் நடந்து வந்தாலே போதும் அவரின் ரசிகர்கள் திரையரங்குளில் கொண்டாடுவார்கள். இதிலும் அவ்வப்போது அப்படியே நடந்து வருகிறார், அதிரடியாக வசனம் பேசுகிறார். எதிரிகள் - சட்ட ஒழுங்கு - குடும்பம் பற்றியும் கிடைக்கும் இடங்களில் அறிவுரை கூறுகிறார். இவற்றை மீறி அவர் செய்யும் சண்டைக் காட்சிகள் ரசிகர்களின் வரவேற்பை பெறுகிறார்.

படத்தின் கதாநாயகி என்று சொல்ல முடியாத ஒரு கதாபாத்திரத்தில் ஹூமா குரேஷி. போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் ஒரு முக்கிய அதிகாரி. ஆரம்பத்தில் ஒரே ஒரு காட்சியில் அஜித்திடம் என்னை ‘கட்டிக் கொள்வதுதானே’ எனக் கேட்கிறார். இவரும் அஜித்தும் காதலர்களா என்ற விளக்கத்திற்கெல்லாம் இயக்குநர் போகவேயில்லை.

நாயகன் அஜித் அளவுக்கு வில்லன் கார்த்திகேயாவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரின் அறிமுகக் காட்சியிலேயே உடல்வாளிப்பை காட்டிவிட்டுத்தான் அவரின் முகத்தையே காட்டுகிறார்கள். நாயகன் அஜித்திற்கு கடும் சவால் கொடுக்கிறார்.

அஜித்தின் குடும்பத்தை மையமாக்கி உணர்ச்சிமயமான கதையும் உள்ளது. எனினும், தமிழ் திரையுலகில் வழக்கமான அண்ணன், தம்பி கதைகள். நாயகனுக்கு உதவும் சக பொலிஸ் அதிகாரிகள் - துரோகம் செய்யும் பொலிஸ் அதிகாரிகள் என்று அரத்தப்புளித்த பாத்திரங்களும் அதிகம்.

இசை யுவன் என்றும், நன்றி ஜிப்ரான் என்றும் போட்டு சமாளித்திருக்கிறார்கள். யுவன் இசையமைத்த அம்மா பாசப் பாடலை படத்தின் உச்சக்கட்டத்தில் போடுகிறார்கள்.

மோட்டார்சைக்கிள் சகாசக் காட்சிகளை ஒளிப்பதிவாளர் நீரவ் ஷா எப்படி படமாக்கியிருப்பார் என்று வியக்க வைக்கிறது. தமிழ்ப் படங்களில் இதுவரை இப்படி ஒரு அதிரடி சண்டை காட்சிகள், சாகச துரத்தல் காட்சிகளைப் பார்த்ததில்லை என்று தாராளமாகச் சொல்லலாம். சண்டை இயக்குநர் திலீப் சுப்பராயனுக்கும், அவரின் குழுவினருக்கும் இந்தப் பெருமை முழுமையாக சேரும்.

இடைவேளை வரை படத்தை பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும், அடுத்து என்ன நடக்கும் என்ற ஆவலுடனும் திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கிறார் விநோத். இடைவேளைக்குப் பிறகு முதல் பாதியை விட இன்னும் மிரட்டலாக இருக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்தால் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை. வழக்கமான தமிழ்ப் படங்களைப் பார்ப்பது போலத்தான் இருக்கிறது. அதையும் முதல் பாதி போல அதிக கவனம் செலுத்தி இன்னும் வித்தியாசமாக எடுத்திருக்கலாம்.

வலிமை அஜித் ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் படமாக மட்டுமே இருக்கிறது.

# தவறான முடிவு...?



உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களுள் ஒருவராகக் கருதப்படும் ஜேம்ஸ் அண்டர்சனையும் அவரின் பந்துவீச்சு இணையான ஸ்ருவர்ட் பிரோட்டையும் ஒருசேர நீக்கி மேற்திந்திய தீவகளுக்கு எதிரான அணியை அறிவித்திருந்தது இங்கிலாந்து கிரிக்கெட்.

அவுஸ்திரேலிய மண்ணில் நடைபெற்ற ஆஷஷ் தொடரில் படுதோல்வி அடைந்ததையடுத்து அணியில் சில அதிரடி மாற்றங்களை மேற்கொண்டிருக்கிறது இங்கிலாந்து கிரிக்கெட். இவர்கள் இருவரை தவிர ஜோஸ் பட்லர், டேவிட் மலன், ரோரி பர்ன்ஸ், ஹஸீப் ஹமீத், சாம் பில்லிங்ஸ், டாம் பெஸ் ஆகியோரும் மேற்கிந்திய தீவகளுக்கு எதிரான தொடரில் இடம்பெறவில்லை.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள வீரர்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் அண்டர்சன். வேகப்பந்துவீச்சாளர்களே உரிய வயது இலக்கணங்கள் அனைத்தையும் உடைத்து தன் முப்பதுகளின் பிற்பகுதிகளிலும் மிகச் சிறப்பாக பந்துவீசி வரும் வீரர். அவரை போலவே டெஸ்ட் அரங்கில் 537 விக்கெட்களை வீழ்த்தியுள்ள வீரர் ஸ்ருவர்ட் பிரோட். இந்நிலையில் தான் அணியில் இருந்து நீக்கப்பட்டது குறித்து முதல் முறையை மனம் திறந்து பேசியுள்ளார் அண்டர்சன்.

“அணியில் தேர்வு செய்யப்படாதது மிகவும் அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்தாலும் இதையும் நான் கடந்து தான் ஆக வேண்டும். ஆனால் இத்தோடு என் கிரிக்கெட் வாழ்வு முடிந்துவிடக் கூடாது என பிராத்தனை செய்துகொள்கிறேன். ஏனென்றால் என்னுள் இன்னும் கிரிக்கெட் மீதமிருப்பதாக நான் நினைக்கிறன். மேலும் வெற்றிக்கான வேட்கையும், அணிக்காக விளையாடும் ஆர்வமும் என்னிடம் எந்தக் குறையும் இல்லாமல் இருக்கிறது. இனி என் ஆட்டத்தில் கவனம் செலுத்தி அணிக்கு என்னால் என்ன செய்யமுடியும் என்பதை மக்களுக்கு மீண்டும் நிரூபிப்பேன்” என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் அண்டர்சன்.

அண்டர்சன் - பிரோட்டின் நீக்கம் குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ஷேன் வற்சன் கருத்து தெரிவித்துள்ளார். “நடந்து முடிந்த ஆஷஷ் தொடரில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களால் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு அத்தனை நெருக்கடி ஒன்றும் ஏற்படுத்த முடியவில்லை. இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் சிறிது அதிருப்தி இருப்பதையும் என்னால் உணர முடிகிறது. ஆனால், அண்டர்சன், பிரோட் ஆகிய இருவரை விட அந்த அணியின் அடுத்த தலைமுறை வேகப்பந்து வீச்சாளர்கள் அத்தனை சிறப்பாக இல்லாத போது, இவர்களின் நீக்கத்தை நான் தவறாக முடிவாகவே கூறுவேன்” என்கிறார் வற்சன்.



# இனி முதல்வன் இவனே...!

நோவக் ஜோகோவிச்சை பின்னுக்கு தள்ளி உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரராக உயர்ந்திருக்கிறார் ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ். கடந்த 18 ஆண்டுகளில் நடால், ஜோகோவிச், பெடரர், முர்ரே ஆகிய நால்வரைத் தவிர இந்த இடத்திற்கு முன்னேறியிருக்கும் முதல் வீரர் இவரே. மேலும், தொழில்முறை வீரர்களுக்கான தரவரிசையின் ஆடவர் ஒற்றையர் பட்டியலில் முதல் இடத்திற்கு உயர்ந்திருக்கும் 27ஆவது வீரர் மெத்வதேவ். இதுதவிர எவ்கேனி கஃப்பில்நிகோவ் மற்றும் மரட் சபின் ஆகியோருக்கு பிறகு இந்த சாதனையை செய்யும் மூன்றாவது ரஷ்ய வீரர் இவர் தான்.

வியாழனன்று நடந்த மெக்சிக்கன் ஓப்பன் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் யோஷிடோ நிஷியோகாவை 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியிருந்தார் மெத்வதேவ். அதே நேரத்தில் துபாய் ஓப்பன் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் புள்ளி பட்டியலில் 123ஆவது இடத்தில் இருக்கும் ஜிரி வெசலியிடம் தோல்வியைத் தழுவியிருந்தார் ஜோகோவிச்.

இதனால் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி 3 முதல் அதாவது கடந்த 86 வாரங்களாக தான் இருந்த வந்த முதலிடத்தை மெத்வதேவிடம் இழக்க வேண்டி இருந்தது. தடுப்பூசி விவகாரம் காரணமாக அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்பட்டு ஜோகோவிச் விளையாடும் முதல் டென்னிஸ் தொடர் இது தான். ஆனால் ஒட்டுமொத்த சர்வதேச டென்னிஸின் வார பட்டியலில் 361 வாரங்களுடன் ஜோகோவிச்சே முதலிடத்தில் நீடிக்கிறார்.

இந்த சாதனைக்கு மிகத் தகுதியானவர் மெத்வதேவ் என தன் டுவிற்றர் பக்கத்தில் பாராட்டியிருக்கிறார் ஜோகோவிச். நடந்து முடிந்த அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் இறுதி போட்டி வரை முன்னேறியிருந்த மெத்வதேவ் அதற்கு முன்னர் நடந்த அமெரிக்கன் ஓப்பன் தொடரில் ஜோகோவிச்சை வீழ்த்தி தன் முதல் கிராண்ட்ஸ்லமை வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புதிய வடிவத்தில் ஐ. பி. எல்.!

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடர் வரும் மார்ச் 26ஆம் திகதி தொடங்கிறது. சென்ற ஆண்டைவிட இரு புதிய அணிகள் இந்த வருடத்துக் கான ஐ.பி.எல் தொடரில் இணைந்துள்ளன. இதனால் லீக் போட்டிகளுக்கான எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இதையடுத்து புதிய போட்டி முறைமையை அறிவித்துள்ளது ஐ. பி. எல். நிர்வாகம்.

இதன்படி, மொத்தம் உள்ள பத்து அணிகள் 5 அணிகள் கொண்ட இரு பிரிவுகளாக முதலில் பிரிக்கப்படும். அப்படி பிரிக்கப்படும் அணிகள் தங்கள் பிரிவில் மீதமுள்ள உள்ள நான்கு அணிகளுடன் இரு முறையும், மற்ற பிரிவில் இடம்பெற்றுள்ள 5 அணிகளுடன் ஒரு முறையும் மோதும். மேலும் தனக்கு நேராக மற்ற பிரிவில் இடம் பிடித்துள்ள அணியுடன் கூடுதலாக ஒரு போட்டியையும் விளையாடும்.

அணிகளின் பிரிவு சமபலத்துடன் இருக்க வேண்டும் என்பதால் இத்தனை ஆண்டு ஐ. பி. எல் வரலாற்றில் கிண்ணத்தை வென்றது, இறுதிப்போட்டிக்கு முன்னேறியது மற்றும் அணியின் மொத்த செயல்பாடுகள் ஆகியவற்றை வைத்து பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி மும்பை, கொல்கத்தா, ராஜஸ்தான், டில்லி, லக்னோ என்ற வரிசை முதல் பிரிவிலும் சென்னை, ஹைதராபாத், பெங்களூர், பஞ்சாப் மற்றும் குஜராத் என்ற வரிசையில் இரண்டாவது பிரிவிலுமாக அனைத்து அணிகளும் இடம்பெற்றுள்ளன.

உதாரணத்திற்கு சென்னை அணியை எடுத்துக்கொள்வோம். அந்த அணி தன் பிரிவில் உள்ள 4 நான்கு அணிகளுடன் இரு முறையும் வேறு பிரிவில் உள்ள 5 அணிகளுடன் ஒவ்வொரு முறையும் மோதும். மேலும் கூடுதல் போட்டியாக தனக்கு நேராக மற்றொரு பிரிவில் இடம்பெற்றுள்ள மும்பை அணியுடன் ஒரு போட்டி விளையாடும். இது போல் ஒவ்வொரு அணியும் மொத்தம் 14 லீக் ஆட்டங்களில் விளையாடுகிறது.

மொத்த லீக் போட்டிகளான 70இல் 55 போட்டிகள் மும்பையிலும் 15 போட்டிகள் புனேவிலும் நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது மும்பையில் நடக்கும் போட்டிகளை மைதானங்கள் வாரியாக வெளியிடப்பட்டுள்ளது. வன்கடே மைதானத்தில் 20 போட்டிகள், ப்ரபோர்ன் மைதானத்தில் 15 போட்டிகள், டி. வை. படில் மைதானத்தில் 20 போட்டிகள் நடைபெறவுள்ளன.




இந்தப் போட்டிமுறையில் தற்போது ஐ. பி. எல். நடந்தலும், 2011இல் 10 அணிகள் பங்கேற்றபோதிலும் இதே முறைமையிலேயே விளையாடின என்பது நினைவில்கொள்ளத்தக்கது.

# மகாசிவராத்திரியும் மயானகாண்டமும்



**வழமையாக சிவராத்திரி அன்று இரவு நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் கலைஞர் கலாநிதி நடிகமணி வி.வி. வைரமுத்து குழுவினரின் மயானகாண்டம் இசை நாடகம் விடியும்வரை இடம் பெறும். மேடையில் 'வசந்தகான சபா' என்று பெரிதாக எழுதப்பட்ட பதாகை தொங்கவிடப்பட்டு இருக்கும். பாய்கள், சமுக்காளம் போன்றவற்றுடன் ஆர்வமுள்ளவர்கள் குடும்பமாக வந்திருந்து விளையாட்டு மைதானத்தில் இருந்து பார்ப்பார்கள்.**



குரு அரவிந்தன்

மாணவப் பருவத்தில் எதையுமே நாங்கள் விளையாட்டாக எடுத்துக் கொள்வோம். ஏன் எதற்கு அதைச் செய்கின்றோம் என்பது அனேகமாக எமக்குத் தெரியாது. பெரியவர்களைக் கணம் பண்ணும் பழக்கம் இருந்ததால், அவர்கள் சொல்வதை, செய்வதை நாமும் பின்பற்றுவோம். இப்படித்தான் தமிழர் பண்டிகைகள், மற்றும் குடும்பம், மதம் சார்ந்த நிகழ்வுகளை நாம் பின்பற்றினோம். ஓரளவு அனுபவமுதிர்ச்சி வந்தபின்தான், காலத்திற்கு ஏற்ப, அறிவியல் சார்ந்த சிந்தனைகளும் எம்மை வழிநடத்தக் கூடிய வகையில் எம்மை மாற்றிக் கொண்டோம்.

இன்று அதை நினைத்துப் பார்க்கும் போது, அந்த அனுபவங்களை இளைய தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. இதற்குக் காரணம், போர்ச்சூழல் காரணமாக நாமும் எமது முன்னோரும் பரம்பரையாக வாழ்ந்த கங்கேசந்துறை அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டிருப்பதுதான். போர் முடிந்து சுமார் 12 வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் இராணுவம் எமது மண்ணைவிட்டு வெளியேறாது நிரந்தரமாக அங்கே குடியிருப்பதால், புதிதாகப் பௌத்த விகாரைகள் எழுப்பப்பட்டு, எமது அடையாளங்கள் அங்கு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவேதான் கடந்தகால நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாணவப்பருவத்தில் காங்கேசந்துறையில் கல்லூரிவீதியில் உள்ள நடேஸ்வராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எனது தந்தையார் அங்கே கனிஷ்ட பாடசாலையில் அதிபராக இருந்ததால், அவருடன் பள்ளிக்குச் செல்வேன். மாசி மாதத்தில் அனேகமாக எல்லோரும் மகாசிவராத்திரி விரதமிருப்பார்கள். சிவராத்தி அன்று கீரிமலைக்குச் சென்று நகுலேஸ்வரரை வழிபட்டு, கேணியில் நீராடி மறுநாள் வீடு திரும்புவோம்.

வழமையாக சிவராத்திரி அன்று இரவு நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் கலைஞர் கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து குழுவினரின் மயானகாண்டம் இசை நாடகம் விடியும் வரை இடம் பெறும். மேடையில் 'வசந்தகான சபா' என்று பெரிதாக எழுதப்பட்ட பதாகை தொங்கவிடப்பட்டு இருக்கும். பாய்கள், சமுக்காளம் போன்றவற்றுடன் ஆர்வமுள்ளவர்கள் குடும்பமாக வந்தி ருந்து விளையாட்டு மைதானத்தில் இருந்து பார்ப்பார்கள்.

அரிச்சந்திரனாக வந்து கணிரென்ற குரலில் பாடி நடிப்பதென்பது இலகு வான காரியமல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். அரிச்சந்திரன் என்றால் வைரமுத்துதான், இசை நடன மரபுக்குப் புதுப் பொலிவு தந்தவர் என்று சொல்லு மளவிற்கு அவரது இயற்கையான நடிப் பாற்றல் இருந்தது. சிவராத்திரி மாசியில் வருவது போல, வைரமுத்துவும் மாசி மாதத்தில்தான் பிறந்திருந்தார். மயான காண்டம் நாடகம் சுமார் 3000 தட வைக்கு மேலும், பக்தநந்தனார் 1000 தடவைக்கு மேலும் மேடை ஏறியதில் ஊர் மக்களான எங்களுக்கும் பெரு மையே.

வருடத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது அவர் எனது தகப்பனாரைச் சந்திக்க குருவீதியில் உள்ள வீட்டிற்கு வருவது ஞாபகத்தில் நிற்கின்றது. ஒன்று பிள்ளைகளின் படிப்பு பற்றியதாய், எங்கள் தகப்பனாரிடம் வந்து ஆலோசனை கேட்பார். இன்னுமொன்று நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நாடகம் போடுவதற்கு வேண்டிய இடத்திற்கான பரிந்துரைக்காக வருவார். சிவராத்திரி தினத்திலன்று அந்த மைதானம் அவருக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கும் என்று தந்தையார் சொல்வார்.

மேடையில் பார்க்கும் வைரமுத்துவுக்கும், நேரில் பார்க்கும் வைரமுத்துவுக்கும் நிறைய வித்தியாசத்தை நான் கண்டேன். வழியில் காணும்போது, தம்பி என்று அன்பாக அழைக்கும் அவர் மேடையில் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவார். எப்பொழுதும் எனது தந்தைமீது மதிப்பு வைத்திருந்தார். நடேஸ்வராக் கல்லூரி நாடகம் ஒன்று போட்டிக்காக கொழும்பில் மேடை ஏற்றியபோது அவரும், காங்கேசந்துறையைச் சேர்ந்த அண்ணாவி நாகமுத்து என்பவரும் நாடகத்தின் வெற்றிக்கு பலவிதத்திலும் உதவியாக இருந்தார்கள்.

இசைக்கருவிகள் வாசிப்பதிலும், குறிப்பாக ஆர்மோனியம் வாசிப்பதில் திறமை மிக்கவராகத் திகழ்ந்தர். காங்கேசந்துறை மண்ணுக்குப் பெருமை தேடித் தந்த, எல்லோரோடும் அன்பாய் பழக்கூடிய இவருக்கு 1984 ஆம் ஆண்டு காங்கேசந்துறையில் மணிவிழா எடுத்துக் கௌரவித்திருந்தனர். இவரைக் கௌரவிக்கும் விதத்தில் நடேஸ்வராக்கல்லூரி மருங்கில் மக்கள் கலைஞர் அமைப்பினால் இவரது உருவச்சிலை ஒன்றும் இந்த பெப்ரவரி மாதம் காங்கேசந்துறையில் நிறுவப்பட்டுள்ளது. மகாஜனக்கல்லூரி நண்பரும், யாழ்ப்பாண பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான என். சண்முகலிங்கன் அவர்கள் நடிகமணியின் சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்ததில் எமக்கும் பெருமையே. கலைஞர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், எங்கள் உள்ளங்களில் என்றும் நிறைந்திருப்பர்.

சிவராத்திரி அன்று பருத்தித்துறை - கீரிமலை வீதியும், மாவிட்டபுரம் - கீரிமலை வீதியும் பக்தர் கூட்டத்தால் நிறைந்திருக்கும். செல்வச்சந்நிதி பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் காங்கேசந்துறை வழியாகப் பஞ்சஈசுவரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு நடந்து வருவார்கள். மகாசிவராத்திரி தினத்தில் இலங்கையில் உள்ள நகுலேஸ்வரம், கேதீச்சரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய பஞ்சஈசுவரங்களிலும் விசேட பூசைகள் இடம் பெறும்.

'சிவனுக்குச் சிவராத்திரி, அம்மனுக்கு நவராத்திரி' என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. இந்து மதத்தவர்களின் முக்கிய பண்டிகைகளில் மகா சிவராத்திரியும் ஒன்றாகும். அவனின்றி ஒரணுவும் அசையாது என்றது போல, 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தில் மனமொன்றிப் போயிருந்த சிவபெருமானை அன்னை சக்தி எழுப்பியதால், சிவன் சினம் கொண்ட போது உருவானதே பிரபஞ்சம் என்ற நம்பிக்கையும் உண்டு.

இதையே, அணுக்களின் மூலக்கூறுகள் தனிமங்களாகி, தனிமங்கள் பொருட்களாகி உருவானதுதான் இன்றைய நாம் காணும் பிரபஞ்சம் என்கிறது அறிவியல். சூரியன் கும்பராசியில் சஞ்சரிக்கும் காலமான மாசி மாதத்தில் தான் மகாசிவராத்திரி வருகிறது. ஒவ்வொரு மாதத்தின் சதுர்த்தி திதியும் சிவபெருமானுக்குரியதாக இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும், இந்து நாட்காட்டியின்படி பால்குண மாதத்தின் தேய்பிறை (கிருஷ்ணபட்சம்) சதுர்த்தி திதியில் இரவில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. அதனால் இந்த 2022 ஆண்டு மகா சிவராத்திரி மார்ச் மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொண்டாடப்படுகிறது. மகா சிவராத்திரி அன்று, விரதம் இருப்பதும், இரவு கண் விழிப்பதும், சிவதரிசனம் செய்வதும், அன்னதானம் செய்வதும் மிகுந்த புண்ணியங்களை சேர்க்கும் என்று சிவபக்தர்கள் நம்புகின்றார்கள். ஈசன் சிவபெருமானை வழிபடுவதன் மூலம் சிவனின் அனுகிரகத்தைப் பெறலாம் என்கிறது இந்துமதம். இந்த நாளின் சிறப்புகள் குறித்து திருவிளையாடல் புராணம், கருடபுராணம், கந்தபுராணம், பத்மபுராணம், அக்னி புராணம் போன்ற பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரி நாளில், இரவு முழுவதும் சிவாலயங்கள் திறந்திருப்பதால், பக்தர்களுக்காக ஒவ்வொரு காலப் பூஜைகளும் சிறப்பாக நடந்தேறும். முதல் கட்ட பூசை மார்ச் மாதம் முதலாம் திகதி மாலை 6:21 மணிக்கும், இரண்டாம் கட்ட பூசை இரவு 9:27 மணிக்கும், மூன்றாம் கட்ட பூசை மார்ச் மாதம் இரண்டாம் திகதி நள்ளிரவு 12:33 மணிக்கும், நான்காம் கட்ட பூசை காலை 3:39 மணிக்கும் ஆரம்பமாகும் என்று நாட்காட்டியில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐந்து வகையான சிவராத்திரி விரதங்களைப் பக்தர்கள் கடைப்பிடிப்பதுண்டு.

நாங்கள் உயர் வகுப்பில் படிக்கும் போது காங்கேசந்துறைக்கு இரண்டு சினிமா திரை அரங்குகள் வந்து சேர்ந்தன. காங்கேசந்துறை-யாழ்ப்பாண வீதியில் இராஜநாயகித் திரையரங்கும், காங்கேசந்துறை - பருத்தித்துறை வீதியில் யாழ் திரையரங்கும் வந்ததால், இதுவரை காலமும் நாடகம் பார்த்த இளம் வயதினரை இந்தத் திரையரங்குகள் தம்வசப்படுத்திக் கொண்டன. அதனால் பெரியவர்கள் பக்தி மார்க்கத்தோடு மகாசிவராத்திரிக்கு நித்திரை முழித்திருக்க, இளையவர்களில் சிலர் மயானகாண்டம் நாடகம் பார்க்கப் போவதாகச் சொல்லிவிட்டு.

பாதியில் எழுந்து சினிமா திரையரங்குகளுக்குப் போகத்தொடங்கிவிட்டார்கள். சிவராத்திரி அன்று மட்டும் விசேடமாக மூன்று காட்சிகள் திரையரங்கில் இடம் பெறும். இங்கே சிவாஜி படம் என்றால் அங்கே எம்ஜிஆர் படம் ஓடும். இரண்டு திரை அரங்குகளிலும் மாறிமாறிப் படம் பார்த்துவிட்டு அதிகாலையில் கீரிமலைக்குச் சென்று கேணியில் குளித்துவிட்டு, சிவன் கோயிலில் இருந்து விரதம் காத்தது போல, காலையில் நல்ல பிள்ளைகளாய் வீட்டிற்கு வந்து விடுவார்கள்.

'சிவாய நம என்று சிந்தித்திருந்தால் அபாயம் ஒருநாளுமில்லை' என்று முன்னோர்கள் சொன்னது போன்று, பல்லாயிரக் கணக்கான மைல்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், மாசி மாதத்தில் மகாசிவராத்திரி வரும்போதெல்லாம் எனக்கு எங்கவூர் மயானகாண்டமும், கீரிமலையும் அந்தநாள் ஞாபகமாய் நினைவில் வரும். எங்கள் கனவுகளைக் கொடிய யுத்தம் தின்றுவிட்டாலும், எங்கிருந்தாலும் நினைவுகள் என்றும் துளிர்த்துக் கொண்டே இருக்கும். எம் மினம் விழுந்தாலும், எங்கிருந்தாலும் எழுந்து நிற்கும்.

# போரை நிறுத்தும் பிரேரணை: வீற்றோவால் தடுத்தது ரஷ்யா

## இந்தியாவும் சீனாவும் நழுவல்; மற்றொரு முறை உலக அரங்கில் ஐ. நாவின் கையாலாகாத்தனம்..!

உக்ரைனில் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவந்து தனது படைகளை அங்கி ருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரும் பிரேரணையை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் தனது வீற்றோ அதிகாரத் தினால் தடுத்துவிட்டது மொஸ்கோ.

ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்று எதிர்த்து வாக்களித்தால் கூட பிரேரணையை முன்நகர்த்த முடியாது என்பது சபை யின் சாசன விதி ஆகும். சீனா, பிரான்ஸ் அமெரிக்கா, ரஷ்யா (சோவியத்), இங்கி லாந்து ஆகியனவே அந்த ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் ஆகும்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற அங்கத்துவத்தைக் கொண்டுள்ள 15 உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் நிரந்தர உறுப்பு நாடான சீனாவும், அங்கத்துவநாடான இந்தியாவும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. உக்ரைன் யுத்தத்தில் மேற்குலகின் வெற்றிக்கு சீனா, இந்தியாவின் பிரதி பலிப்புகள் மிக அவசியமானவையாகும்.

பிரேரணையை ரஷ்யா தடுத்துவிட்டதை அடுத்து ரஷ்யாவைப் பாதுகாப்புச் சபையில் இருந்து நீக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை ஐ. நாவுக்கான உக்ரைன் நாட்டின் தூதர் முன்வைத்திருக்கிறார்.

அது சாத்தியமா?

1945 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டஐ. நா. சாசனத்தின்படி ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் (permanent members) என்பதில் உள்ள "நிரந்தரம்" (permanent) என்பதை அகற்றுகின்ற-மாற்றுகின்ற எந்த வழிமுறைகளும் விதிகளில் கிடை யாது. "நிரந்தரம்" என்பது நிரந்தரமானது. ஆகவே ரஷ்யாவை நீக்குகின்ற கோரிக் கையானது ஐ. நாவைக் கலைக்கின்ற யோசனையாகவே கருதப்படும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் உலகில் இனியொரு உலகப் போர் ஏற்பட இடமளிக்கக் கூடாது என்பதை நோக் களமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.ஆனால் அதன் முக்கிய பிரிவான பாதுகாப்புச் சபையின் ஐந்து உறுப்பு நாடுகள் வசம் இருக்கின்ற 'வீற்றோ' என்கின்ற உச்ச அதிகார வாக்கு உலக அமைதியைப் பாதுகாப்பதற்குத் தடையாக இருந்துவருகிறது.

உக்ரைன் போர் ஓர் அணு ஆயுத மோத லாக வெடிக்கலாம் என்ற அச்சங்களுக்கு மத்தியில் அதைத் தடுப்பதற்கான எத்த னிப்பு ஒன்றைச் செய்ய முடியாத ஐ. நா. சபையின் கையாலாகாத்தனம் உலக அரங்கில் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப் படுகிறது.

---



சிறுகதை

# பழத்தால் பிரச்சினை பரமசிவன் வீட்டில் மட்டுமல்ல...

கனகா கணேஷ் - அவுஸ்திரேலியா

வீட்டுக்குள், வந்ததும் வராததுமாக முதல் வேலையாக பையிலிருந்த அந்த பழங்களை வெளியில் எடுத்தேன். சிறியதும் பெரியதுமாக நான்கு சீதா பழங்கள் இருந்தன.

இப்போது தான் நான் குழம்பி போனேன். நான்கு பழங்களை மூன்று பேருக்கு சமமாக பிரிப்பது எப்படி? கூட்டல் , கழித்தல் என்பதே எனக்கு தகறாறு என்ற நிலையில் பிரித்தல், பெருக்கல் எல்லாம் என்னைப் பொருத்தவரை Mission impossible தான்.

ஆனால் அதைவிட சுலபமான வழி ஒன்று இருக்கிறது. அது முதலில் ஒரு பழத்தை சாப்பிட்டு விடுவது. பிறகு மீதி இருக்கின்ற மூன்று பழங்களை ஆளுக்கு ஒவ்வொன்றாக பிரித்து கொள்வது. யோசனை வந்த கணத்திலேயே அதனை செயல்படுத்த தயார் ஆனேன்.

பழம் வாசனை வேறு மூக்கை துளைத்துக் கொண்டிருந்தது. முதலில் உள்ளதிலேயே பெரியதாக உள்ள ஒரு பழத்தை எடுத்து இரண்டாக பிரித்து ஒரு ஸ்பூனால் சாப்பிட ஆரம்பித்தேன். தேனின் சுவையை மிஞ்சியது.. வெல்லப் பாகாய் நாக்கில் கரைந்தது.

மா, பலா, வாழையைப் போய் முக்கனியில் சேர்த்தார்களே. எனக்கு மட்டும் அதிகாரம் இருந்திருந்தால் முக்கனிகள் என்பது மூன்று சீதா பழங்கள் மட்டுமே என்று சட்டம் இயற்றியிருப்பேன்.

முதல் பழம் முடிந்ததே தெரியவில்லை.

இப்போது மேசையில் மூன்று பழங்கள் மட்டுமே இருந்தன. அதாவது, மூன்று பேர்களுக்கும் சமமான மூன்று பழங்கள்.

அப்படியே வைத்துவிட்டு எழுந்தேன் அடுத்த வேலைகளைப் பார்க்க. ஆனால் மனசு வேறு இடத்திற்கு நகர்ந்தால் தானே...! பழம் இருந்த இடத்தையே சுற்றிக் கொண்டிருந்தது.

இப்போது என் எண்ணமும் வேறாக இருந்தது.

மகனும் கணவரும் வருவதற்கு நிறைய நேரம் இருக்கிறது. வேண்டுமானால் அவர்கள் பங்கை அவர்கள் வந்த பிறகு சாப்பிட்டுக் கொள்ளட்டும். என் பங்கை நான் நினைக்கின்ற வேளைகளில் சாப்பிட யாரைக் கேட்க வேண்டும்.

இப்பொழுது நான் எனது இரண்டாவது பழத்தை சாப்பிட ஆரம்பித்தேன். இது முந்தைய பழத்தை விட சுவையோ சுவை. என்னையும் அறியாமல் மூன்றாவது பழத்தையும் எடுத்தேன். பாதிக்கும் மேல் சாப்பிட்ட பிறகு தான் கவனித்தேன் நான் அவர்கள் பங்கிலும் கை வைத்ததை.

இப்போது என்ன செய்வது. ஒரு பழம் மட்டும் தானே மிச்சம் இருக்கிறது. ஒரு பழத்தை ஆளுக்கு பாதியாக கொடுக்க நினைத்த பரமசிவன் குடும்பம் சந்தி சிரித்ததை இதிகாசங்கள் சொல்லி சிரித்த கதையை நானும் அறிவேன். என் வீட்டிலுமா அது நடக்க வேண்டும்.

ஒன்று செய்யலாம். பேசாமல் இதையும் சாப்பிட்டு விட்டு அவர்கள் வருவதற்குள் மறுபடியும் வேறு வாங்கி வைத்து விட வேண்டியது தான்.

நினைத்த மாத்திரத்தில் அரை வினாடிக்கும் குறைவான நேரத்தில் கை கடைசி பழத்தில். பாதியளவு கூட சாப்பிட்டிருக்க மாட்டேன். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. சிவ பூஜையில் கரடியாக யாரது என்று கடுப்பு ஒரு பக்கம். யாராக இருந்தாலென்ன தட்டிவிட்டு போகட்டும். நான் பழம் முழுவதுமாக முடியும் வரை எழுந்திரிக்கப் போவதில்லை.

ஆனால் மறுபடியும் தட்டுகிறார்களே. இம்முறை இன்னும் கொஞ்சம் கூடுதல் சத்தத்துடன் கேட்டது.

சரி போய் பார்க்கலாம் என்று எழும்பினேன். கதவு பக்கத்தில் கூட போயிருக்க மாட்டேன். மறுபடியும் தட்டப்பட முகமெல்லாம் கடுப்பாகி, கதவைத் திறக்க, கணவர் நிற்கிறாரே.

அவரை உள்ளே நுழையக்கூட அனுமதிக்கத் தோன்றாமல் அங்கிருந்தபடியே மேசையைப் பார்த்தேன். அதில் பாதி இடத்தை சீதா பழ தோல்களும் விதைகளும் தான் நிரப்பி இருந்தன. அதைக்கூட மறைத்து விடலாம். ஆனால் அந்த வாசனை.?? வீடு முழுவதும் நிரம்பியிருக்கின்ற அந்த பழ வாசனையை என்ன செய்வது?

என்னைத் தாண்டி உள்ளே வந்தவர் கையில், ஒரு பை இருந்ததை அப்போது தான் கவனித்தேன். அவர், அதை என்னிடம் கொடுத்து, " வரும் வழியில் வாங்கி வந்தேன், கையில் வைத்திருந்த போது கூட தெரியவில்லை. வீட்டிற்குள் நுழைந்த பிறகு தான் வாசம் தூக்குகிறது. கழுவி கொண்டு வாங்க, சாப்பிடலாம் " என்று சொன்னதைக் கேட்டு, எனக்குள் சிரித்துக் கொண்டேன், அவர் கவனிக்க வில்லை போலும், பழ வாசனை பையிலிருந்து அல்ல, என் கையிலிருந்து என்று.

அவர் கொடுத்த பையில் இருந்தவைகளை வெளியில் எடுத்தேன். நான்கு சீதா பழங்கள் இருந்தன.

இப்போது நான் குழம்பி போனேன்.

நான்கு பழங்களை மூன்றுபேருக்கு சமமாக பிரிப்பது எப்படி??

சுலபமான வழி என்னவென்றால், முதலில் ஒன்றை........

# காரைதீவு ஆயுர்வேத வைத்தியசாலையில் மூலிகைத்தோட்டம்






காரைதீவுஆயுர்வேத வைத்தியசாலையில் மூலிகைத்தோட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மூலிகைத் தோட்டத்தில் மூலிகை கன்றுகளை நடும் வைபவம் ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எம் சிஎம் காலித் தலை மையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபால் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார். சமூக செயற்பாட்டாளரும் உதவிக் கல்விப் பணிப்பாள ருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

இந்த மூலிகைத் தோட்டத்தின் பயன்பாடு பற்றி டாக்டர் காலித் விரிவான விளக்கம் அளித்தார்.

# நூறு கோடி மக்களின் எழுச்சி; இலங்கையிலும் கொண்டாட்டம்







வருடாந்தம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் நூறுகோடி மக்களின் எழுச்சி இம்முறை இலங்கையிலும் கொண்டாடப்பட்டது. வன்முறைகள் இல்லாது வாழ்தல் கொண்டாடப்பட வேண்டியது - பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், அட்டனில் நோர்வூட் மைதானத்தில் தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமான சமூக நல்வழி மன்றத்தின் பிரதான பொறுப்பாளர் திருமதி சந்திர மதியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மலையகத்தில் உள்ள மன்றத்தை சார்ந்த பெண்கள், மற்றும் ஏனைய இளம் பெண்கள் இணைந்து இந்நிகழ்வை ஒரு கொண்டாட்டமாக நடத்தியுள்ளனர். இந்நிகழ்வில், மலையகத்தின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் நாட்டார் பாடல்கள் என்பன பெண்களால் அருமையாக பாடப்பட்டது.

தெற்காசிய பெண்கள் அமைப்பின் செயற்பாட்டளரான கமலாபாசின் அவர்களால் தெற்காசிய நாடுகளுக்கு இப்பிரச்சார எழுச்சி முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் தெற்காசிய பெண்கள் அமைப்பின் உறுப்பினரும் பெண்ணிய செயற்பாட்டளருமான கமலா வாசுகியினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உங்கள் வளர்ச்சிக்கு...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**எதற்காகவெல்லாம் வருத்தப்படுகிறோம்?**

பொதுவாக, மனிதர்கள் எதைப் பற்றியெல்லாம் கவலைப்படுகிறார்கள், அதிகமாகக் கவலைப்படும் விஷயங்கள் என்னென்ன, குறைவாகக் கவலைப்படும் விஷயங்கள் என்னென்ன என்பனவற்றையும் ஆராய்ச்சிகள் வாயிலாகத் தெளிவாகக் கண்டறிந்து பட்டியலிட்டுள்ளார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்.

"வருத்தம் என்பது அது குறித்த கதை சொல்லப்படும் விதத்தில் இருக்கிறது" என்கிறார். அனைவருமே வருத்தப் படும் விஷயம் குறித்து ஒரு கதையைச் சொல்வோம். அந்தக் கதையில் நாம் கதாசிரியரா அல்லது பாத்திரமா என்று கேட்டால், பெரும்பாலானோர் சிந்தித்துச் சொல்வது, இரண்டுமே என்பதைத்தான். இந்த இரண்டு ரோல்களையும் செய்வதாலேயே வருத்தத்தை நம் அனுகூலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்கிறார் ஆசிரியர். நம்முடைய வருத்தத்தையும் அதற்கான காரணியையும் கண்டுபிடித்து அதில் எவை எல்லாம் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பவை எனப் புரிந்து கொண்டு, அவற்றை நாம் திறம்பட நிர்வகித்தால் வருத்தத்தால் சிறந்த பலனைப் பெற முடியும்" என்று கூறி முடிக்கிறார் ஆசிரியர்.

பல்வேறு சுவையான ஆராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டறியப்பட்ட விஷயங்களை எளிய நடையில் சொல்லும் இந்தப் புத்தகத்தை அனைவரும் கட்டாயம் ஒரு முறை படித்துப் பயன்பெறலாம்.

-நாணயம்

## எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் பிறந்த தின விழா

பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களது 88வது பிறந்த தினம் கடந்த வாரம் கொழும்பில் ஊடக மற்றும் நலன்விரும்பிகளால் எச். எச்.விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்ற போது மலையகத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான பி.பி.தேவராஜ் எழுத்தாளரை கௌரவித்தார்.




# நான் உலக அழகியாக இருந்தாலும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் பெஷன்டிசைன் நவீன வடிவமைப்பு பாடம்தான் படித்தேன். பின்பு கனடாவில் நடிப்பு மற்றும் தொலைக் காட்சி துறையில் பட்டப்படிப்பை கடந்த வருடம் பூர்த்திசெய்தேன். அதனால் சிறந்த தொழில்வாய்ப்பு தேடிவருகிறது. எனினும் இறையருளால் இந்த அழகுத் துறையும் எனக்கு வாய்ப்பளித்துள்ளது.

**கேள்வி:** தங்களுக்கு எத்தனை வயது? இது இக்கிய இராச்சியத்தில் அழகு ராணியாக தெரிவானது முதல் தடவையா?

**பதில்:** எனக்கு 21வயது.கடந்த 3தடவைகள் இந்த கிரீடத்தை சூடியுள்ளேன். 2020-21க்காக நான் இறுதியாக 56போட்டியாளர்களுடன் போட்டியிட்டு முதல் ஆசியப்பெண்ணாகத் தெரிவானேன். அது சந்தோசமாகவிருக்கிறது. கொவிட் காரணமாக இவ்வாண்டுக்கும் அதனை நீடித்துள்ளார்கள்.

**கேள்வி:** இன்னமும் அழகுராணி போட்டியில் கலந்துகொள்ளும் எண்ணம் இருக்கிறதா?

**பதில்:** எதிர்வரும் அக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலக அழகி தெரிவுப்போட்டியில் கலந்து கொள்ளவிருக்கிறேன்.

**கேள்வி:** தங்கள் பொழுதுபோக்கு என்ன?

**பதில்:**அழகுக்கலை மற்றவர்களுக்கு உதவுதல் ஆடைவடிவமைப்பு கலையிலீடுபடுதலும் பயணித்தலும்

**கேள்வி:** நீங்கள் ஒரு சிறந்த பரோபகாரி என அறிகிறோம்? அந்த சிந்தனை பண்பு எப்படி வந்தது.?

**பதில்.** அந்தப்பண்பு எனது அம்மா விடமிருந்துவந்தது. 2014இல் 60ஆயிரம் டொலர்களுக்கு மேல் நிதி சேகரிப்பு செய்து எண்ணற்ற தானதருமங்களைச் செய்தோம். Together for Short lives Christie Charity செயற்றிட்ஙகளினூடக மக்களுக்கு உதவியுள்ளோம். E.Francia Foundation ஆரம்பித்து சுயஉதவி செய்துவந்தேன்.

**கேள்வி :** தங்கள் எதிர்கால லட்சியம் என்ன?


**பதில்:** இறைவன் என்னைப்படைத்தது மக்களுக்கு உதவிசெய்வதற்காக. எனவே முடிந்தளவு சமூகசேவை செய்யக்காத்திருக்கிறேன்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

28) 

இத்திண்ம உருக்களின் உச்சிகளின் கூட்டுத்தொகையின், இரண்டு மடங்கு எத்தனை?

……………………………………………………………………………………………………..

29) சிட்டையினைப் பூரணப்படுத்துக

| பொருள் | வாங்கிய அளவு | ஒன்றின் விலை | | செலுத்த வேண்டிய பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பேனை | 3 | 12 | 00 | ……………. | …….. |
| பென்சில் | 5 | 8 | 00 | ……………. | …….. |
| சவர்காரம் | 1 சோடி | 60 | 00 | ……………. | …….. |
| மொத்தம் | | | | ……………. | …….. |

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் உள் மூச்சு வாங்குதல் வெளிமூச்சு விடுதல் எத்தனையாவது படிமுறையில் இடம்பெறும்?
(1) படிமுறை 3 (2) படிமுறை 1 (3) படிமுறை 2

31) விளாமரம் பூக்கும் மாதம் எது?
(1) ஆனி (2) ஆவணி (3) ஐப்பசி

32) வித்து முளைத்தலுக்கு அவசிய மற்ற காரணி எது?
(1) சூரியஒளி (2) வளி (3) வெப்பம்

33) பின்வருவனவற்றுள் தனியார் நிறுவனம் அல்லாதது
(1) தனியார் வங்கி (2) சிறப்பு அங்காடி (3) பிரதேசசெயலகம்

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் உள் மூச்சு வாங்குதல் வெளிமூச்சு விடுதல் எத்தனையாவது படிமுறையில் இடம்பெறும்?
(1) படிமுறை 3 (2) படிமுறை 1 (3) படிமுறை 2

31) விளாமரம் பூக்கும் மாதம் எது?
(1) ஆனி (2) ஆவணி (3) ஐப்பசி

32) வித்து முளைத்தலுக்கு அவசிய மற்ற காரணி எது?
(1) சூரியஒளி (2) வளி (3) வெப்பம்

33) பின்வருவனவற்றுள் தனியார் நிறுவனம் அல்லாதது
(1) தனியார் வங்கி (2) சிறப்பு அங்காடி (3) பிரதேசசெயலகம்

34) இலங்கையைப் பிரித்தானியர் முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு எது?
(1) 1948 (2) 1972 (3) 1815

35) பின்வருவனவற்றுள் பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மை எது?
(1) வித்துக்களை உண்ணுதல்
(2) தாவரங்களுக்குப் பசளை கிடைத்தல்
(3) பூக்களில் தேன் குடித்தல்

## விடைகள்

28) 24
29) i) 36.00
ii) 40.00
iii) 120.00
iv) 196.00

30) 2
31) 1
32) 1
33) 3
34) 3
35) 2

கல்வி tv CHANNEL-1

**06.02.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**06.02.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து பக்கசார்பற்ற விசாரணை!



## அவசியம் என்கிறார் ரணில்

**கொழும்பு, பெப். 27**

**ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் சம்பந்தமாக தற்போது புதிய விடயங்கள் வெளியாகியுள்ளதால், அனைவரும் இணைந்து அவை தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணைகளை நடத்தவேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பாக புதிய விடயங்கள் வெளிவந்துள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிலருக்கு எதிராக வழக்கு தொடருமாறு பரிந்துரைக்கப்பட்டது. விசாரணையை நடத்தி அரசாங்கம், முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. நீதிமன்றத்தின் முடிவுக்கு அமைய குற்றம் சுமத்தப்பட்ட தரப்பினரின் சாட்சியங்களை விசாரிக்காது நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விடுதலை செய்தது.

அதேபோல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூன்று பேரும் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இறுதியில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர நீதிமன்றத்தில் சத்தியக் கடிதம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஷானி அபேசேகரவின் கடிதத்துக்கு அமைய குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு இதில் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் இணைந்து பக்கசார்பற்ற முடிவை எடுக்க வேண்டும்-என்றார். (அ)



# கல்வியங்காட்டிலும் கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், பெப். 27

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் நேற்று காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# 1 லீற்றர் பாலின் விலை 100 ரூபாயாக அதிகரிப்பு

கொழும்பு, பெப். 27

ஒரு லீற்றர் பாலின் விலை 100 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் அறிவித்துள்ளார்.

இருப்பினும் பால் சார்ந்த பொருட்களின் விலையில் எந்தத் திருத்தமும் இருக்காது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எல்.ஐ.ஓ.சியின் எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டது.

இந்நிலையில் ஏற்கனவே நாட்டில் பால்மாவுகு தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவிவரும் நிலையில் பாலின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# தலசீமியா நோய்...

**(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

காதல் திருமணமோ, பேச்சுத் திருமணமோ எதுவானாலும் இருவரும் தலசீமியா காவிகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். யாராவது ஒருவர் காவியாக இருப்பதில் பிரச்சினை இல்லை. பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் இரத்தப் புரதத்தை 10-12 பஃணடல் வைத்திருக்க சிவப்பணுக்கள் செறிந்த இரத்த மாற்றத்தைத் தொடர்ந்து Blood transfusion செய்வது அவசியம். நோயின் கடுமை, மண்ணீரலின் அளவு, உடலேற் புத்தன்மை போன்ற பிற பல காரணிகளைப் பொறுத்தே இரத்தமாற்றத்தின் கால இடைவெளி நிர்ணயிக்கப்படுகிறது.

**இரத்த மாற்றம் இல்லாமல் வேறு சிகிச்சைகள் உண்டா?**

ஆம், குறைபாடுள்ள இரத்த உற்பத்தி உயிரணுக்களை மாற்றி, அதற்குப் பதிலாக இன்னொருவரிடம் இருந்து ஆரோக்கியமான இரத்த உற்பத்தி உயிரணுக்கள் வைக்கப்படுகின்றன. இன்னொருவர் என்பவர் பொதுவாக HLA பொருத்தமுடைய (மாற்றத்திற்குத் தகுந்த மரபுப்பொருத்தம்) “குறைபாடுடைய மரபணுக்கள் அற்ற“ சகோதரராக அல்லது சகோதரியாக இருக்க வேண்டும். உறவுமுறை அற்ற HLA பொருத்தம் கொண்ட BMT (எலும்பு மச்சை மாற்றம்) செய்யலாம். ஆனாலும், HLA பொருத்தம் கொண்ட உடன் பிறப்புகளிடம் இருந்து BMT மாற்றம் செய்வதே சிறப்பானது.

எலும்பு மச்சை மாற்றம் செய்து கொண்ட நோயாளிகளுக்கு அதற்குபின், மேலும் இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை இருக்காது.

அவர்கள் சாதாரண மனிதர்கள் போன்று உயிர்வாழலாம். குழந்தைப் பருவத்தில் உடலில் இரும்புசத்து அதிகரிப்பதற்கு முன் இந்த சிகிச்சையை BMT செய்வதே சிறந்தது.

**இந்நோய் வராமல் பாதுகாப்பதற்கான ஆலோசனை என்ன?**

இது முக்கியமான கேள்வியாகும். வருமுன் காப்பதே சிறந்தது. உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ தலசீமியா இருந்தால் திருமணம் செய்வதற்கு முதல், குடும் பத்தைப் பற்றி திட்டமிடுவதற்கு முன்னால் உங்கள் வைத்தியரோடு ஆலோசிப்பது மிகவும் அவசியமாகும். குறிப் பாக தலசீமியா காவியாக இருப்பவர்கள் இன்னும் ஒரு தலசீமியா காவியை கரம்பற் றாமல் இருப்பது சாலச்சிறந்தது. குடும்பத்தில் அல்லது உறவினர்கள் மத்தியில் தலசீமியா நோய் இல்லாத ஏனையவர்கள் திருமணம் செய்வதற்கு முதல், பொண் மாப்பிள்ளை பார்கின்ற போது அவர்களுக்கு FBC பார்த்துக் கொள்வது நல்லது.

# முல்லைத்தீவு உள்ளூர் உற்பத்திகளுக்கு வாராந்த சந்தை திங்கட்கிழமைகளில்!

முல்லைத்தீவு, பெப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கோடும் உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் உள்ளூர் உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்தும் வாராந்த சந்தை மாங்குளம் - கொக்குளாய் வீதி சந்தியில் அமைந்துள்ள அங்கயற்கண்ணி அன்னக்குடிலில் வாரம் தோறும் திங்கட்கிழமை இடம்பெறும் என கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ம.உமாமகள் அறிவித்தந்துள்ளார்.

இப் பொருட்களை கொள்வனவு செய்து உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் அங்கயற்கண்ணி அன்னக்குடில் உணவகத்தில் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வாராந்த சந்தை கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மலையக மக்களின் அபிலாஷை ஆவணம் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடல்



கொழும்பு, பெப்

மலையக மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கி பல்வேறு தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள ஆவணம் தொடர்பில் பல சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடப்படவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தற்போது குறித்த ஆவணம் மொழிப்பெயர்க்கப்பட்டு வரும் நிலையில், வட மாகாணத்தில் வாழும் இந்திய வம்சாவளி மக்களையும் இணைத்து கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடல் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மனோ கணேசன் கூறினார். (அ)

# மத்திய கிழக்கு நாடுகளின் உதவியை நாடுகிறது அரசு

கொழும்பு, பெப். 27

மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்து இலங்கை அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நாணயமாற்று நெருக்கடிக்கு தீர்வு காண உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# சிவாலயங்களுக்கு நிதியுதவி

கொழும்பு, பெப். 27

எதிர்வரும் முதலாம் திகதி நிகழவிருக்கும் சிவராத்திரி விரத புண்ணியகால நன்னாளை முன்னிட்டு, ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரத் தலங்கள் உட்பட, நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் செயல் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம், தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இளம் இந்துச் சிறார்களின் ஆன்மிக உணர்வுகளை மேன்மையுறச் செய்து, கலை நிகழ்வுகள் மூலமாக ஆக்கத்திறன் ஆளுமைகளுக்குக் களம் அமைத்துக்கொடுப்பதோடு, மேன்மேலும் அவர்களுக்கு ஊக்கம் நல்கும் விதத்திலே பரிசில்கள் வழங்கிப் பாராட்டுதல் என்ற முக்கிய நோக்கத்தை அடிப்படையாக கொண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியிலே சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (அ)

## போரை...

யில் தனது வீற்றோ அதிகாரத்தினால் தடுத்துவிட்டது ரஷ்யா.

ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்று எதிர்த்து வாக்களித்தால் கூட பிரேரணையை முன்நகர்த்த முடியாது என்பது சபையின் சாசன விதி ஆகும். சீனா, பிரான்ஸ் அமெரிக்கா, ரஷ்யா (சோவியத்), இங்கிலாந்து ஆகியனவே அந்த ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் ஆகும்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற அங்கத்துவத்தைக் கொண்டுள்ள 15 உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் நிரந்தர உறுப்பு நாடான சீனாவும், அங்கத்துவ நாடான இந்தியாவும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. உக்ரைன் யுத்தத்தில் மேற்குலகின் வெற்றிக்கு சீனா, இந்தியாவின் பிரதிபலிப்புகள் மிக அவசியமானவையாகும்.

பாதுகாப்புச் சபையில் தோற்கடிக்கப்பட்ட இந்தப்பிரேரணையை அடுத்த கட்டமாக பொதுச் சபை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

பிரேரணையை ரஷ்யா தடுத்துவிட்டதை அடுத்து ரஷ்யாவைப் பாதுகாப்புச் சபையில் இருந்து நீக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை ஐ. நாவுக்கான உக்ரைன் நாட்டின் தூதர் முன்வைத்திருக்கிறார்.

அது சாத்தியமா? 1945 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஐ. நா. சாசனத்தின்படி ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் என்பதில் உள்ள ”நிரந்தரம்” என்பதை அகற்றுகின்ற - மாற்றுகின்ற எந்த வழிமுறைகளும் விதிகளில் கிடையாது. 'நிரந்தரம்' என்பது நிரந்தரமானது.

ஆகவே ரஷ்யாவை நீக்குகின்ற கோரிக்கையானது ஐ. நாவைக் கலைக்கின்ற யோசனையாகவே கருதப்படும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் உலகில் இனியொரு உலகப் போர் ஏற்பட இடமளிக்கக் கூடாது என்பதை நோக்களமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. ஆனால் அதன் முக்கிய பிரிவான பாதுகாப்புச் சபையின் ஐந்து உறுப்பு நாடுகள் வசம் இருக்கின்ற 'வீற்றோ' என்கின்ற உச்ச அதிகார வாக்கு உலக அமைதியைப் பாதுகாப்பதற்குத் தடையாக இருந்துவருகிறது.

உக்ரைன் போர் ஓர் அணு ஆயுத மோதலாக வெடிக்கலாம் என்ற அச்சங்களுக்கு மத்தியில் அதைத் தடுப்பதற்கான எத்தனிப்பு ஒன்றைச் செய்ய முடியாத ஐ. நா. சபையின் கையாலாகாத்தனம் உலக அரங்கில் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்படுகிறது. (அ)

## பயங்கரவாதத்...

நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்து நாடு பூராகவும் அதற்கான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆரம்பத்தில் இருந்தே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சட்டமானது இன்று நாட்டில் சகல மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, இன, மத, பேதம் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சகலரும் முன்வைத்து வருகின்றனர்.

ஏற்கனவே முன்னைய ஆட்சியில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அதற்குப் பொது இணக்கம் காணப்பட்டபோதிலும் 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இன்று நிலைமைகள் சுமுகமாக உள்ள காரணத்தால் இதனை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டுள்ளன.

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் இந்த விடயங்கள் வலியுறுத்தப்படும். இப்போது நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்” - என்றார். (அ)

## ஜனநாயக...

இருப்பினும், அதனால் கிடைக்கும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென்று, அனைத்துத் தரப்பினரிடமும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முற்பகல், எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரண்பிம காணி உறுதி வழங்கும் நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால், 30 பேருக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

அந்நியச் செலாவணி பற்றாக்குறையானது, இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாகும். கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளால் கிடைக்கப்பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

தற்போது நிலவும் சவால்களுக்கு முகங்கொடுக்க, எதிர்க்கட்சிகளும் பொது மக்களும், அரசாங்கமும் இணைந்துப் பணியாற்ற வேண்டிய தேவையை எடுத்துரைத்த ஜனாதிபதி அவர்கள், இடையூறு விளைவிக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், பொய்ப் பிரசாரங்கள் போன்றவற்றை, எந்தவொரு பொறுப்பான தரப்பிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை என்றார். (அ)

## ஈஸ்டர்...

பந்தமாக முறைப்பாடு ஒன்றை செய்வது அவரது இந்த விஜயத்தின் நோக்கம் எனவும் கூறப்படுகிறது.

இதன் பின்னர், பேராயர், ஜெனிவா மனித உரிமைகள் சபையிலும் முறைப்பாடு ஒன்றை செய்வதற்காக சுவிற்ஸர்லாந்து செல்ல உள்ளார். அங்கிருந்து ஜேர்மனிக்கும் அவர் விஜயம் செய்ய உள்ளதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தகவல்கள் கூறுகின்றன. (அ)

## யாழ்.சிறையில்...

பின்னர் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இந்த விடயத்தை ஊடகங்களுக்கு தெரி வித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன் னெடுத்திருந்த அரசியல் கைதிகளின் உறவினர்களை நேற்று முன்தினம் பிற்பகல் ஆளுநர் சந்தித்து கலந்துரை யாடினார்.

இதன்போது நேற்று காலை ஆளுநரின் பிரத்தியோக செயலாளர் ஒருவருடன் அரசியல் கைதிகளின் உறவினர்களும் யாழ். சிறைச்சாலைக்கு சென்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள அரசியல் கைதிகளுடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுத் தருவதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக நேற்று காலை சிலைச்சாலைக்கு சென்ற அரசியல் கைதிகளின் உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்த அரசியல் கைதிகளைச் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் வைத்தியசாலையில் அனுமதி!

மட்டக்களப்பு, பெப். 27

மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதியில் ஊடக வியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மட்டக்களப்பை சேர்ந்த லட்சுமனன் தேவ பிரதீபன் என்னும் ஊடகவியலாளரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகிச் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ் நிலையம் அகற்றுவது தொடர்பாக வந்தாறுமூலைப் பகுதியில் செய்தி சேக ரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

வந்தாறுமூலைப் பகுதியில் பஸ் நிலையம் ஒன்று அகற்றப்பட்டமை தொடர்பில் அந்த பஸ் நிலையத்தை அமைத்தவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்கு வந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஆதரவாளர்கள் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் மீது அங்கிருந்த கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பொது ஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஆதரவாளர்களின் ஆதரவுடனேயே தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகவியலாளர் லட்சுமனன் தேவ பிரதீபன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## எரிபொருள் தட்டுப்பாட்டை...

கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், தேவைக்கு ஏற்ப எரிபொருளைக் கொள்வனவு செய்யுமாறும் அதிகளவில் கொள்வனவு செய்வதால் தட்டுப்பாடு ஏற்பட்டு கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்ய வழியமைக்கும் என்று மாவட்ட செயலாளர் க.மகேசன் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் மாவட்டத்தில் எரிபொருள் பொது மக்களுக்கு வழமைபோன்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தில் தேவையான போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது.

தேவையான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. எனவே பொதுமக்கள் முண்டியடித்து சேமித்து வைத்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த தேவையில்லை. அத்தோடு வழமைபோன்று யாழ். மாவட்டத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. எனவே செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபடவேண்டாம் அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், பொதுமக்களின் வழமையான எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்கான எரிபொருளை மாத்திரம் விநியோகிக்குமாறு அறிவுறுத்தியுள்ளதோடு ஏனைய பதுக்கல்,சேமித்து வைக்கும் முகமான கொள்வனவிற்கு எரிபொருளை விநியோகிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளார். (அ)

## எரிபொருள்...

விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த யோசனையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடனுதவியை தொடர்ந்தும் வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பது கடினமாகும் என்பதால், அதற்கான கடனை உடனடியாக நிறுத்தவும் மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கும் சுமார் 56 பில்லியன் ரூபாவை (28 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கூட்டுத்தாபனத்துக்கு மேலும் கடனுதவி வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடிக்கும் வழிவகுக்கும் என்பதால், உடனடியாக மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

எரிபொருள் விற்பனையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டத்தைக் குறைப்பதற்காக எரிபொருள் விலையை கணிசமாக அதிகரிக்குமாறும் மத்திய வங்கி அரசாங்கத்துக்கு முன்மொழிந்துள்ளது.

வார வேலை நாட்களின் எண்ணிக்கையை நான்காக குறைத்து, நாளொன்றின் வேலை நேரத்தை அதிகரிக்க மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது. இதன்படி, நிறுவனங்களின் செயற்பாடுகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5:30 மணிவரை தொடர வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், பொதுமக்கள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் பிரேரணையானது நெருக்கடி மற்றும் எரிபொருளைச் சேமிப்பதன் அவசியத்தை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் பாரிய ஊடகப் பிரச்சாரத்தை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது. (அ)

## அரச...

பகே மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நேற்று ஜெனிவா பயணமாகினர்.

இந்த தூதுக்குழுவினர் மார்ச் 2 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட்டை சந்திக்கவுள்ளனர்.

மேலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் தூதுவர்களுடன் இரு தரப்பு சந்திப்புகளும் நடைபெறவுள்ளன. (அ)

## கொழும்புக்கு...

கிறது. அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் இந்த அதிகாரி எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

நுலான்ட் தனது இந்த விஜயத்தின் போது இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இலங்கைக்கு வரும் நுலான்ட், ஜனாதிபதி ஜோ பைடனின் இலங்கை தொடர்பான வலுவான செய்தியை எடுத்து வரவுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வன்னி மாவட்ட காணி பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நடமாடும் சேவை இன்று

வவுனியா, பெப். 27

வவுனியா மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்ட மக்களின் நீண்டகால காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் காணி அமைச்சின் நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் மாலை 4:00 மணிவரை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல காணியுடன் தொடர்புடைய திணைக் களங்களும் பங்குபற்றவுள்ளதுடன் காணி அமைச்சர், காணி ஆணையாளர் நாயகம், காணி அமைச்சின் செயலாளர், ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

எனவே காணி தொடர்பாக பிணக்குள்ள மற்றும் ஏனைய சகல பொதுமக்களுக்கும் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசியல் இலாபத்துக்காகவே சிலர் விவசாயிகளை தூண்டிவிடுகின்றனர்

## பிரதமர் மஹிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 27

20 வருடங்களாக வாழ்ந்து வந்தும், அந்தக் காணியின் சட்டபூர்வ உரிமையற்றிருக்கும் மகாவலி மக்களுக்கு அந்த உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை அரசாங்கம் என்ற வகையில் உணர முடிகின்றது என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முற்பகல், எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

இரசாயனப் பசளை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அடுத்து, புரட்சியாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கட்சியினர், விவசாய மக்களை வீதிக்கு இறக்கினர். பயிர்ச் செய்த வயல்களுக்கு தீயிட்டுப் பயிர்களை அழித்துச் செய்த போராட்டங்கள் என்பன, விவசாயி மீதுள்ள அன்பால் செய்யப்பட்டவை அல்லவென்றும் இதன்மூலம் அவர்கள் அரசியல் இலாபம் பெறவே முயற்சித்தனர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

காணி உரித்துரிமையை வழங்குவதால் மாத்திரம் மகாவலி விவசாய மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்வை எட்டப்போவதில்லை என்று இதன்போது தெரிவித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தேசத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, அனைத்து விவசாயக் காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது விவசாய மக்களின் கடமையென்றும் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தின் மூன்றாவது தலைமுறையினரை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் பொறுப்பை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கின்றதென்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# கொரோனா தொற்றினால் மேலும் 24 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று முன்தினம் மேலும் 24 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16,166ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணைக்குழு அமைக்கும் பிரேரணை விரைவில் சபைக்கு

மன்னார், பெப். 27

மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணைக்குழு அமைப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் விரைவில் முன்வைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான "நீதிக்கான எங்கள் குரல்" எனும் தலைப்பில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை வலியுறுத்திய திட்ட பயனாளிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அரச அதிகாரிகளுடனான கருத்தமர்வு மன்னார் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் அளவில் மன்னார் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

குறித்த கருத்தமர்வில் மாற்றுத்திறனாளிகள் ,சமூக மட்டத்தில் அனுபவிக்கும் பாரிய சவால்களையும் அவர்களின் தேவைகளையும் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடம் எடுத்துக் கூற, அவர்களுக்கு நேரடியாக சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

குறிப்பாக நடைபெற்று முடிந்த யுத்தத்தினாலும் பல்வேறுபட்ட காரணங்களினாலும் மன்னார் மாவட்டத்தில் புள்ளி விபரப்படுத்தப்படாத 1436 நபர்களுக்கு மேல் மாற்றுதிறனாளிகளாக காணப்படுகின்றனர்.

இவர்கள் சமூக மட்டத்தில் அனைத்து விடயங்களிலும் ஓரங்கட்டப் பட்டவர்களாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பேருந்து நிலையங்கள் , வங்கிகள் , தனியார் நிறுவனங்களிலும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் அணுகும் வசதிகள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான மலசலகூட வசதிகள் , நிழல் அணுகும் வசதிகள் போதிய அளவு மேற்கொள்ளப்படவில்லை என அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

பல பொதுப் போக்குவரத்து சேவையின் போது மாற்றுத்திறனாளிகளை ஏற்றிச் செல்வதில் பல்வேறு பின்னடைவுகளை காட்டுவதாகவும், இதனால் அவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய மருத்துவ தேவைகளை பெற்றுக் கொள்வதற்காக பல மைல்கள் தூரம் பயணித்து மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வர வேண்டி உள்ளதாகவும், எனவே பிரதேச வைத்தியசாலையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை வழங்கப்படவேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு தனியான ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டும். அவர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவுகள் மாவட்ட ரீதியாக அதிகரிக்கப்படவேண்டும். மருத்துவ சான்றிதழ்கள் வழங்கப்படுவது உண்மைத் தன்மையுடன் பரவலாக்கப்படவேண்டும்.

ஒரு வீட்டில் மூன்று மாற்றுத்திறனாளிகள் காணப்படும் போது அங்கு ஒருவருக்கே மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதனால் பல துன்பங்களை



அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம்.

பெண் மாற்றுத் திறனாளிகளுக்காக புதிய கொள்கைகள் நடைமுறைகள் வரையப்படவேண்டும்.அவை சட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

பெண் மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தி மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும். அவர்களது கருத்து சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளி நபர்கள் சமூகத்தில் சம உரிமைகளை அனுபவிக்க உரிமையுடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு அரசின் கல்வி , தொழில் வாய்ப்பு, அரசியல் போன்றவற்றில் இட ஒதுக்கீட்டை அதிகரித்து ஊக்குவிப்பு வழங்குவதுடன் அவர்களுக்கு சலுகைகளையும் வழங்கப்பட வேண்டும் போன்ற மிக முக்கியமான கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டது.

குறித்த கோரிக்கைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான ஏற்பாடுகளை தான் மேற்கொள்வதாகவும் மாற்றுத்திறனாளிகளினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அவர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான பிரேரனை ஒன்றை பாராளுமன்றத்தில் தான் விரைவில் முன் வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் மாற்றுத்திறனாளிகள் போக்குவரத்தின் போதும் அதே நேரம் அரச அலுவலகங்களிலும் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாகவும் தாம் கவனம் செலுத்துவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளர்,மன்னார் போக்குவரத்து சபையின் முகாமையாளர், மன்னார் மாவட்ட பெண்கள் சமாசம், அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியம், இளையோர் தன்னார்வக் குழு, தேனி மாற்றுத் திறனாளிகள் அமைப்பினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள்களின் விலையை அதிகரிப்பது பலனற்ற செயல்

## நிதியமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

எரிபொருள் விலைகளை அதிகரித்து, அதன் காரண மாக கஷ்டங்களுக்கு உள்ளாகும் பல துறையினருக்கு அரசாங்கம் மீண்டும் மானியங்களை வழங்குவதைவிட எரிபொருள் விலைகளை தற்போதைய மட்டத்தில் வைத்திருப்பது சாதகமானது என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

எரிபொருளின் விலைகளை அதிகரித்தால், பஸ் சங்கங்கள், வெதுப்பக உரிமையாளர்கள், காய்கறி செய்கையாளர்கள் உட்பட அரசாங்கம் மீண்டும் மானியங்களை வழங்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால், எரிபொருளின் விலைகளை தற்போதுள்ள மட்டத்தில் வைத்திருப்பது சாதகமான செயற்பாடாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான டொலர்களை பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றன.

இதன் காரணமாக எரிபொருள் விலைகளை அதிகரிக்கவேண்டும் என பல தரப்பினர் நிதியமைச்சிடம் யோசனை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக கலந்துரையாட சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள நிதியமைச்சர் எரிபொருள் விலை அதிகரிப்பின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் நிதியை மீண்டும் மானியமாக செலுத்த நேரிட்டால், விலைகளை அதிகரிப்பது பயனற்ற செயல் என குறிப்பிட்டார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-விசில்
4.30 மணி : உதவும் கரங்கள்



5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்



7.00 மணி : SPOTLIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-திஸ்ஸ அத்தநாயக்க-ஐ.ம.ச தேசிய அமைப்பாளர்



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவன் டிவி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஔிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு